Registered No. M. 2330

'SIDDHANTHAM'
Vol. 25—No. 5

சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

மலர் 25 | நந்தன வைகாசி 1952 மே | இதழ்

உள்ளுறை

பத்திராசிரியர் : சி. எம். இராமச்சந்திரன் செட்டியார், பி.ஏ., பி.எல்.
உதவிப் பத்திராசிரியர் : வித்வான் - வை. குஞ்சிதபாதம் பிள்ளை
சைவ சித்தாந்த மகா சமாஜம்
53, திருவள்ளுவர் தெரு, சைதாப்பேட்டை, சென்னை-15




பெரியபாளையம் பின்புறம்

கொங்கில் குறும்பில குரக்குத்தளி

இது தற்போது பெரிய பாளையம் என வழங்குவது. திருப்பூருக்கு கிழக்கே 6 கல்.

சுவாமி - சுக்கிரீசர். இது வைப்புத் தலம். கல்வெட்டுக்கள் உண்டு. குளம் - நஞ்சராயன் ஏரி. நள்ளாற்றுப் பாய்ச்சல். சுந்தரர் தரிசித்த தலம்.



பெரியபாளையம் வடபால்

Reg. M. 2330

உ

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியையுள் நாடு.

மலர் 25 | நந்தன வைகாசி 1952 மே | இதழ் 5

நாட்டு ஒலி

1. கோள்கைகள் :—மக்கள் அறிவு படைத்த உயிர்கள். அவ்வறிவின் பயனாகக் கொள்கைகளை ஏற்படுத்திக் கொள்வதுண்டு. அக்கொள்கைகள் பல சமயங்களில் பலவாறாக இருக்கும். காலத்திற்கும், இடத்திற்கும், நடவடிக்கைக்கும் பொருந்த வெவ்வேறாக அமைவது உண்டு. அனுபவத்திற்கும், பண்பாட்டிற்கும் ஏற்றவாறு மாறுபடுவதும் உண்டு. ஆகவே பற்பல நாடுகளில் பற்பல வகுப்பார்களில் பற்பல காலங்களுக் கேற்றபடி பலவாறாக அக்கொள்கைகள் அமைந்திருக்கின்றன. மேலும் கொள்கைகள் தனி மனிதனுக்கு உரிமையுடையன அல்ல. பலபேர் சேர்ந்து ஒரே கொள்கை உடையவர்களாக இருக்கலாம். அன்னார்கள் ஒரு தொகுதியினர் ஆகி அக்கொள்கைகளைக் கடைப்பிடித்து வாழ்க்கை நடத்தி வரலாம். இவ்வாறாக மானிட வர்க்கத்தில் தோன்றியிருக்கிறபடியால், மானிடவர்க்கம் தொகுதி தொகுதியாக அமைப்பு பெற்று இருக்கின்றது. இக்கொள்கைகள் பலவாறான இயக்கங்களிலும் உண்டு. சில மக்கள் தங்கள் கொள்கைகளில் தீவிரமான ஊக்கம் கொண்டிருப்பார்கள். சிலபேர் நடுத்தரமான உணர்ச்சி கொண்டிருப்பார்கள். சிலபேர் அதுவுமின்றி பெயருக்கு மட்டும் கொள்கை உடையவர்களாகக் கூறிக்கொண்டு வாளாயிருப்பார்கள். இது உலக இயற்கை.

ஒரே கொள்கை படைத்த ஒரு தொகுதியினருள் எல்லாரும் ஒரே வகை ஊக்கம் கொள்ளுதல் அரிது. சில பேர்கள் மட்டும் மிகுந்த ஊக்கத்தோடு உழைப்பார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு அக்கொள்கைகளில் நம்பிக்கை மிக இருக்கும். நம்பிக்கை மிகுதியினால் ஆர்வம் ஏற்படும். ஆர்வம் ஏற்படவே தம் கொள்கைகளைப்பிறர்பால் ஊட்டிப் பரப்ப எண்ணுவார்கள். தங்கள் தொகுதியினர் உள்ளே ஆர்வம் குறைந்துள்ள மக்களிடம் அக்கொள்கைகளைப் பரப்பி வேரூன்றச் செய்வார்கள். அதுவுமன்றி அக்கொள் கைகளைப் பெறாத ஏனையமக்களிடமும் ஆர்வம் மிகுதியினால் தங்கள் கொள்கைகளைப் புகுத்திவிக்க முயலுவார்கள். இந்தவிதமாக உலகில் கொள்கைப் பரப்பு ஏற்படுகிறது. இக்கொள்கைப் பரப்புதான் வடமொழியில் "பிரசாரம்," என்று பெயர். தற்சமயத்தில் "பிரசாரம்" என்ற சொல் வெகுவாக மக்களிடை அடிபடுகிறதல்லவா?

2. கோள்கைகளில் பாகுபாடு:—மேலே கொள் கைகள் பலவகையாக வேறுபட்டிருக்கும் என்று கூறப் பட்டது. பொதுவாக அவைகளில் இரண்டுவகைகள் காணலாம். ஒன்று உலகச்சார்பு, மற்றொன்று சமயச் சார்பு. இவ்விருவகைகளும் கணக்கற்ற உட்பிரிவுகளைக் கொண்டிருக்கின்றன.

உலகச் சார்புக் கொள்கைகளுக்குச் சில எடுத்துக் காட்டுகளைக் கூறுவோம். மக்களுள் நன்றாய் வாழவேண்டி உழவு, வாணிபம் முதலான இயக்கங்களைப் பண்டைய நாள் முதல் கைக்கொண்டிருக்கிறார்கள். இவ்வியக்கங் களில் சில பேருக்குப் பெருக்கமும், சிலபேருக்கு இறக்கமும் ஏற்படுவதுண்டு. இதனாலே செல்வமும் ஏழ்மையும் உல கில் ஏற்படுகின்றன. இவ்வாறு ஏற்படாமல் எல்லா மக்க ளும் ஒரே வகையான நிலைமையில் வாழவேண்டி, சிக்கன முறை என்ற கொள்கையை அறிஞர்கள் போதித்தார்கள். அப் போதனையாலும் ஒரே தன்மையான இன்ப வாழ்வு ஏற்பட வில்லை. பிறகுக் கூட்டுறவு இயக்கம் என்ற கொள் கையினால் இந்தக் கெடுதி நீங்குமென்று சில அறிஞர்கள் எண்ணினார்கள். எண்ணினது மாத்திரமன்றி, நடவடிக் கைகளில் புகுத்தவும் தொடங்கினார்கள். மக்கள் தொகுதி களாகச் சேர்ந்து அவ்வியக்கத்தில் உழைத்தார்கள். இதன்

பலனாகக் கூட்டுறவு இயக்கம் உலகமெங்கும் பரவி வருகின்றது. இவ் வியக்கம் பெருகுவதற்குக் காரணம் சில மக்கள் செய்யும் பிரசாரமே யாகும். இனி கூட்டுறவு இயக்கத்திலும் மானிட இன்பத்திற்குத் தக்க பலன் கிடைப்பதரிதென்று சில மக்கள் எண்ணுகிறார்கள். பொதுஉடைமை என்ற கொள்கை கூட்டுறவிலும் சிறந்ததென்று அவர்கள் நம்புகிறார்கள். அவர்கள் செய்யும் பிரசார வேலை மிகவும் வலுவானது. தற்போது பலநாடுகளிலும் இவ் வியக்கம் முதிர்ந்துகொண்டு வருகிறது. பல நாடுகளில் இவ் வியக்கத்தின் பலனாக நாட்டு அரசியலே மாறிக்கொண்டு வருகிறது. இவைகள் எல்லாம் கொள்கைப் பரப்பு அல்லது பிரசாரம் என்பதின் வேலையேயாகும்.

3. சமயப் பரப்பு: உலகிய சார்புக்கு அடுத்தாற்போலுள்ள சார்பு சமயச் சார்பு என்று கூறினோம். சமயச் சார்பு என்பது மக்களின் முற்கால, தற்கால, பிற்கால வாழ்க்கைகளைக் குறித்து ஏற்படுத்திக் கொண்ட கொள்கைகளின் தொகுதியாகும். இக் கொள்கைகளும் பல காலங்களில் பலவகைகளாக வேறுபட்டிருப்பது இயல்பு. உலகில் கணக்கற்ற சமய வேறுபாடுகள் உண்டு. இதைக் கண்டே தாயுமானவர் "சமயகோடிகள்" என்றார். மக்களின் அறிவுக் கேற்றபடி சமயங்கள் படிப்படியாக இருக்கும். ஆஸ்ட்ரேலியா பண்டைய மக்களின் சமயம் முதற்கொண்டு சைவ சித்தாந்தம் வரை உயர்ந்து கொண்டு வந்திருக்கிற பற்பல சமய பேதங்கள் உலகத்திலே இருக்கின்றன. அவ்வச் சமயங்களில் ஆர்வம் உடையவர்கள் தங்கள் தங்கள் சமயங்களே மேன்மையானவை என்று கூறுவார்கள். இவ்விதமாகக் கூறுவதில், கூச்சலும், போராட்டமும் ஏற்படும். ஆகவே, சமயச் சண்டைகள் மிக ஆகி சொல்லவொண்ணாத கேடுகளும் ஏற்பட்டிருக்கின்றன.

உலகிலே உணவு முதலிய பருப் பொருள்களைக் காட்டிலும் எண்ணம் முதலிய நுண்பொருள்களில் மக்களுக்கு ஊக்கம் அதிகம். இதற்குக் காரணம் ஆர்வம்தான். நுண்பொருள்களிலே சமயக்கொள்கை மிகச் சிறந்தது. 'எங்கிருந்து வந்தோம், எங்கே யிருக்கிறோம், எங்கே போகின்றோம்' என்ற கேள்விகளைக் கேட்பதிலும் விடை சொல்லுவதிலும் மனிதன் மிகுந்த ஆர்வம் கொள்ளுகிறான்.

இக் கேள்விகளுக்கு விடைகூறுவதில் கணக்கற்ற மாறுபாடுகள் ஏற்படுகின்றன. ஒருவன் ஒருவகையாக விடை சொன்னால் மற்றவன் வேறுவகையில் அதை எதிர்ப்பான். எதிர்ப்பவனைத் தோற்கடிப்பதே சிறந்த விருது என்று சமயக் கணக்காளர்கள் எண்ணுவார்கள். இதனால் சமயப் போர்கள் உலகில் வலுத்தன.

"பிரதிவாதி பயங்கரம்" என்பதைப்போன்ற பட்டப் பெயர்களும் விருதுகளும் வைத்துக் கொள்வதின் நோக்கம் என்ன ? பிற கொள்கைகளை மறுத்துத் தம் கொள்கைகளை வலியுறுத்துவதின் பலன் அல்லவா ? இவ்விதமாகப் போர் புரிந்து வாதம் செய்து பிறரைத் தோற்கடித்துத் தாம் வெல்ல நினைப்பதே அன்னார்களின் முயற்சியாகும். இவ்வாறு செய்வதினால் தங்கள் சமயக் கொள்கைகளைப் பரப்ப முயலுகிறார்கள். இந்தச் சமயப் பரப்பு எல்லா நாடுகளிலும் எல்லாக் காலங்களிலும் இருந்திருக்கிறது என்று அறியவேண்டும். பரப்பு என்பதனுடைய தன்மை எவ்வளவு ஊக்கமாக இருந்திருக்கிறதென்று சொல்லவும் வேண்டுமா ?

4. பிற நாடுகள் :—மேற்கு நாடுகளில் சமயப் பிரசாரமானது கிறிஸ்து சமயத்தில் சிறப்பாகத் தோன்றிற்று. பத்தொன்பதரை நூற்றாண்டுகளுக்குமுன் யூதர் வகுப்பில் பாலஸ்தீனத்தில் கிறிஸ்து தோன்றினார். அப்போது யூதர்களுடைய சமயம் சடங்குகளால் இழிந்தநிலை அடைந்திருந்தது. அந்த நிலைமையை ஆட்சேபித்துத் தூய்மையான சமய வாழ்க்கையைப் போற்றி அவர் போதனை செய்தார். அவருடைய மாணாக்கர்கள் பதினொருவரையும் நான்கு திக்குகளுக்கும் அனுப்பித் தமது கொள்கைகளைப் பரப்பச் செய்தார். அப்போது ரோமராஜ்யம் மிகப் புகழ் பெற்றிருந்தது. அதிலே விக்கிரக ஆராதனை அதிகமாக இருந்தது. அதனை வெறுத்துப் பால் என்ற பிரசாரகர் கிறிஸ்துவின் போதனையைப் பரப்பினார். அவ்விதப் பிரசாரத்தினால் கிறிஸ்து சமயம் உலகிலேயே பெரிய சமயமாகப் பரவிற்று.

பிறகு அறுநூறு ஆண்டுகளுக்குப்பின் அரபி நாட்டில் முகமது தோன்றி அஞ்ஞானத்தில் மூழ்கியிருந்த அராபியர்களை ஈடேற்றுவித்தார். அவருக்குப்பின் வந்த நான்கு

காலிபாக்கள் முகமதிய சமயத்தைப் பல நாடுகளிலும் பரப்பினார்கள். வெள்ளையரல்லாதாரில் முகமதிய சமயமே மிகப் பெரிய சமயமாயிற்று.

இனி ஆசியாக் கண்டத்தில் சீனா முதலிய கீழைப்பகுதிகளில் பௌத்த சமயம் பெருகிற்று. அதற்கும் காரணம் புத்தசமயிகளுடைய பிரசாரமே ஆகும். கிறிஸ்துவ சமயத்தில் கிளைப்பகுதிகளாகத் தோன்றிய ரோமன், லூதரன் வெஸ்லியன் முதலிய கிளைச்சமயங்கள் பிரசாரத்தினாலேயே வலுவடைந்தன. ஸ்வீடன், அமெரிக்கா முதலான நாடுகளிலிருந்து இந்தியாவிற்கும் ஆப்பிரிக்காவிற்கும் கணக்கற்றபிரசாரகர்கள் சென்றுகிறிஸ்தவசமயத்தைப் பெருக்குகிறார்கள் அல்லவா? இதற்கு வாய்ப் பேச்சே அன்றி பொருள் உதவியும் செய்கிறார்கள். அதற்குக் காரணம் அன்னார்கள் தமது சமயத்தில் வைத்திருக்கும் அன்பும் ஆர்வமுமேயாகும்.

5 நமது நாட்டில் :—நமது பாரதத்தில் தொன்றுதொட்டே பிரசாரவேலை ஒரு சிறப்புப் பெற்ற கொள்கையாக எடுத்தாளப்பட்டு வந்திருக்கின்றது. இதிகாச புராணங்களில் கூறப்பட்டுள்ள ஆசிரம வாசங்களெல்லாம் பிரசாரக் கூடங்களே. ஆரண்யங்களில் பன்னக சாலைகள் கட்டிக்கொண்டு தவஞ்செய்து வந்த முனிவர்கள் ஆசிரமத்தை அண்டினவர்களுக்குப் புராணக் கதைகள் மூலமாகச் சமயப்பிரசாரம் செய்துவந்தார்கள். அவ்விதப் பிரசாரங்களில் தோன்றியவைதான் தற்போதுள்ள பல வகைப் பட்ட புராண நூல்கள். பிறகு நாட்டில் தோன்றிய கிளைச் சமயங்கள் பிரசாரத்தையே தங்கள் கருவிகளாகக் கொண்டனர். முதலில் தோன்றிய கிளைச் சமயம் ஜைனம் ஆகும். அதனைப் பெருக்கிய மகாவீரர் அருமையான சொற்பொழிவுகளாலே தமது கொள்கைகளைப் பரப்பினார். வடக்கேயிருந்து தெற்கே வந்த பத்திரபாகு முதலிய ஜைனக் குரவர்களும் மற்றும் பல ஜைனப் புலவர்களும் சமயப் பிரசாரத்தினாலேயே தமது கொள்கைகளைப் பரப்பினார்கள். ஜைனத்திற்குப் பிறகு பௌத்தம் வந்தது. அச்சமயமும் அதன் சமயச் சீடர்களால் பெருகியது. பின்னாளில் வந்த வடநாட்டு வைஷ்ணவமும், சீக்கியமும் பிரசாரத்தினாலேயே பரவின. தற்போது, இஸ்லாமியமும்,

கிறிஸ்தவமும் அந்த முறையிலேதான் பெருகிவந்தன. இப்பொழுதும் பெருகிவருகின்றன.

இனி, தென்னாட்டில் அதே செய்தியைத்தான் அறிகின்றோம். பௌத்த ஜைனங்கள் தெற்கே வந்து ஒரு புரட்சியைச் செய்தன. பிறகு சைவ, வைணவங்கள், மறுமலர்ச்சியடைந்தன. அம் மறுமலர்ச்சிக்குக் காரணபூதர்களா யிருந்தவர்கள் நாயன்மார்களும், ஆழ்வாராதிகளும் ஆவர். தேவாராதி பன்னிரு திருமுறைகளும், நாலாயிர திவ்வியபிரபந்தமும் அப்பிரசாரத்திற்குத் தகுந்த கருவிகளாக இருந்தன. அடியார்கள் திருக்கோயில்களுக்குச் செல்வதும், அங்கே இன்னிசையால், பதிகப் பாசுரங்களைப் பாடினதும் பிரசாரத்திற்குத் தகுந்த சாதனங்களாய் இருந்தன. இந்த வகையில் ஆயிரமாண்டுகளுக்குமுன் பிரசாரங்கள் நடைபெற்றதினால் சைவ வைணவ சமயங்கள் சீர் கெடாமல் இன்றுவரை நிலைத்திருக்கின்றன. இவ்வியக்கங்களுக்கு உதவியாகச் சோழபாண்டியர்கள் பெயர் பெற்ற ஆலயங்களை நிறுவினார்கள். நாடெங்கும் மக்கள் சமயத்தில் ஈடுபட்டு அதனை மறவாமல் இருந்தார்கள்.

6. அண்மையிலே :—தென்னாட்டில் சோழபாண்டியப் பேரரசுகள் நிலைகுலைந்தன. வெளிநாட்டுப் படையெடுப்புக்கள் வந்தன. தமிழர்களுடைய தன்னரசு தொலைந்தது. சில நூற்றாண்டுகள் கர்நாடகத்தார் இந்நாட்டை ஆண்டார்கள். அவர்களுடைய ஆட்சியும் தொலைய முகமதியர்கள் பிரவேசித்தார்கள். இந்தச் சீர் கெட்ட நிலைமையிலே சமயம் என்ன கெதியாகுமென்று சொல்லவும் வேண்டுமா? ஆனால் நாயகச் சிற்றரசர்களும், மராட்டிய மன்னர்களும் ஓரளவு சமயங்களையும், சமய நிலையங்களையும் பாதுகாத்து வந்தார்கள். அப்போது பெரிய மடங்கள் தோன்றின. தருமபுரம் திருவாவடுதுறை, திருப்பனந்தாள் முதலான மடங்கள் சோழநாட்டில் வேலை செய்தன. வீரசைவமடங்கள் நடு நாட்டில் வேலைசெய்தன. வைணவ மடங்கள் தொண்டைநாட்டிலும் தென்பாண்டி நாட்டிலும் வேலைசெய்தன. இவர்கள் செய்த வேலையினால் நாட்டில் சமயங்கள் நிலைநின்றன. கணக்கற்ற புலவர்கள் இம் மடங்களின் சார்பில் தழைத்தார்கள். மடத்து அதிபதிகளின்

உபதேசங்கள் மக்களுக்கு ஆறுதல் தந்தன. ஒரு புறம் இஸ்லாமியர் பிரசாரமும், மற்ருெருபுறம் கிறிஸ்தவர்கள் பிரசாரமும் வலுத்துக்கொண்டுவரவும் அவ் வெள்ளத்தை அடக்கி அணேகோலினது இம்மடங்களின் சீரிய செயலே ஆகும். இம்மடங்கள் மூன்று நூற்ருண்டுகள் வரை ஒப்பற்ற சமயப் பிரசாரம் செய்துவந்தன.

7. தற்போதில்:—சமீபகாலம் வரையில் நாட்டுச் சுய சமயங்களுக்குப் பிற நாட்டுச் சமயங்கள்தான் ஒருவகையில் எதிர்ப்புகளாக இருந்தன. ஆகவே சுயசமயங்கள் பெருந் தடைகளையோ, தீமைகளையோ உறவில்லை. தற்போது அந் நிலைமை மாறிவிட்டது. பிறநாட்டுச் சமயங்கள் ஒருபுறத்தில் மும்முரமாக வேலைசெய்யத் தொடங்கினதன்றிப் பொதுவாகச் சமயங்களுக்கே எதிர்ப்புகள் பகுத்தறிவு என்னும் பெயரினுல் தோன்றத் தொடங்கின. முன்னர் படிப்பில்லாதவர்கள், ஒதுக்கப்பட்ட நிலையில் பிறசமயங்களில் ஆறுதல் கண்டு, அவைகளில் புகுந்தார்கள். இப்பொழுதோ நன்ருய்ப் படித்தவர்கள் பழைய சமயங்களில் நம்பிக்கையின்றித் தன் மதிப்புக்கொள்கையில் புகுகின்ருர்கள். காரணம் என்னவெனில் தற்காலச் சமயங்களில் முளைத்து ஓங்கிவரும் சடங்குகளாகிய களைகளின் ஏற்றமேயாகும். களைகளை நீக்கித் தூய்மையான கொள்கைகளை அறிவுறுத்திஞல் இப்படிப்பட்ட விபரீதநிலை ஏற்படாது. இதுநாள்வரை சமயங்களைக் காத்துவந்த மடாலயங்களில் உலகியத்துறைகள் மிகுதியாகி சமயஈடுபாடு குறைந்துவிட்டது. சமயத் தலைவர்கள் சமயக் கொள்கைகளை இலௌகிகச் சடங்குகளாக மாற்றிவிட்டார்கள். மடங்கள் ஆட்சித்துறைகளாகவும் கோயில்கள் சடங்குப் பெட்டகங்களாகவும் மாறிவிட்டன. ஆகவே பகுத்தறிவின் பெயரினுல் கூத்தாட்டங்கள் ஏற்படுவது இயல்பே அல்லவா ?

8. ஒருபுறனடை :—தற்போதிய நிலைமையைக்கண்டு சமயத்தில் ஈடுபட்டவர்களும் பொது மக்களும் கவலைப்படத் தொடங்கிக் கிளர்ச்சி செய்தார்கள். நாட்டு அரசியலிலும், சமய நிலையங்கள் தங்கள் கடமைகளைச் செய்யவில்லையென்று குறைகூறப்பட்டது. அதன் பலனுகச் சட்ட நிபந்தனைகள் ஏற்பட்டன. அதிகாரிகளின் மேற்பார்வையும்

வரத்தொடங்கிற்று. இந்தக் கண்காணிப்பின் விளைவாக சிலசமய நிலையங்கள் விழித்துக்கொண்டன. தங்கள் கடமைகளைச் செய்யவும் தொடங்கின.

அக்கடமைகளில் சிறந்தது சமயப் பிரசாரமாகும். இந்தச் சிறந்த கைங்கரியத்தை முதலாக எடுத்துக் கொண்டவர்கள் தருமபுர ஆதீனத்தார்கள். சமயப் பிரசாரத்திற்காக பெரிய நூல் நிலையம் ஏற்படுத்தி அச்சகம் ஒன்றை அதனுடன் இணைத்துச் சமய நூல்களை வெளியிட்டு இலவசமாகக் கொடுக்கத் தொடங்கினார்கள். தங்கள் தங்குரவர் பெயரலே ஒரு திங்கள் வெளியீட்டைத் தொடங்கி நடத்துகிறார்கள். கலைக்கல்லூரி, சமயக் கல்லூரி, இன்னிசைக் கல்லூரி இவைகளை நிறுவிச் சித்தாந்த மாநாடுகளை அடிக்கடி நடத்துகிறார்கள். இவைகள் எல்லாவற்றிலும் மேலாக ஒரு பெரிய விசைவண்டியை வாங்கி, அதில் ஒலிபெருக்கியையும் வெளியீடுகளையும் நிரப்பி, நாடுதோறும் சென்று, தேர்ந்தெடுத்த பேச்சாளர்களைக் கொண்டு சமயச் சொற்பொழிவுகளை நிகழ்த்துகிறார்கள். இவ்வித கைங்கரியத்தில் ஏனைய மடங்களும் ஈடுபட்டால், எத்தனையோ காரியங்கள் சித்தியாகுமல்லவா ?

9. கோங்கு நாட்டில் :—தருமை ஆதீனத்தார் தற்போது கொங்கு நாட்டைத் தங்கள் பிரசார வேலைக்கு உரித்த இடமாக எடுத்துக் கொண்டார்கள். இந்தத் திங்களில் பவானி, அவிநாசி என்ற பாடல் பெற்ற தலங்களில் சொற்பொழிவுகளை நிகழ்த்திவிட்டுப் பங்குனி உத்திரத் திருநாளன்று அவர்கள் பிரசாரத் திருக்கூட்டமானது கோவைக்கடுத்த திருப்பேரூருக்கு வந்தது. அன்று மாலை திருவிழாவின் பகுதியாகக் கோயிலின் பின் பிரகாரத்தில் அமைத்திருந்த காவணத்திலே, குன்றக்குடி ஆதீனத்துச் சந்நிதானத்தின் தலைமையிலே சொற்பொழிவுகள் நடந்தன. அதுசமயம் தருமைப் பிரசாரத் தலைவரும், பிரசாரகரும் கலந்துகொண்டு பேசினார்கள்.

அடுத்த மூன்று நாள்கள் கோவைக்குச் சுற்றிப் பல இடங்களிலும் பிரசாரக்கூட்டங்களை நடத்தினார்கள். பிறகு திருக்கூட்டம் நொய்யலாற்றின் பள்ளத்தாக்கின் வழியே அமைந்துள்ள ஊர்களுக்கெல்லாம் சென்று இறுதியில் திருப்பாண்டிக் கொடிமுடி அடைந்தார்கள். இந்தப் பய

ணத்தில், சித்தாந்த ஆசிரியருக்குச் சமயப் பிரசாரத்தில் கலந்துகொள்ளும் பெருமை கிடைத்தது. வழிவழியே சொற்பொழிவுகளும் வெளியீட்டு விநியோகமும் நடைபெற்றன. சொற்பொழிவுகள் திருப்பூர் சிவாலயம், காங்கயம் மெய்கண்டார் கழகம், சென்னி மலைக் கைலாய நாதர்கோயில், சிவகிரி வேலாயுத சுவாமிகோயில், கொடுமுடி ஈசுவரன் கோயில் என்பவைகளில் நடைபெற்றன. வெளியீடுகள் சூலூர், பல்லடம், திருப்பூர், காங்கயம், சென்னிமலை, சிவகிரி முதலிய பள்ளிகளுக்கு வழங்கப்பெற்றன. இடையில் தரிசித்துப் படம் எடுத்த இடங்களாவன:—பெரியபாளையத்துக் குரக்குத்தளி, சிவமலை ஆண்டவன் கோயில், விஜயமங்கலம், திங்களூர், சீனுபுரத்துக் கோயில்கள் என்பன. மூன்று நாள்களில் இத்தனைப் பிரசாரமும் நடந்ததைக் குறித்துப் பாராட்டவேண்டாமா?

10. முடிப்புரை:—இந்தப் பிரசாரத்தில் சில அனுபவங்களைப்பெற்றோம். பிரசாரக் கூட்டங்களுக்குமக்கள்வரத் தயங்குவதே இயல்பாக இருக்கிறது. ஆயிரம் விளம்பரச் சீட்டுகள் கொடுத்தாலும் சரிதான், ஒன்றும் கொடாமல் போனாலும் சரிதான், வருகிற பேர்கள் ஒரேஎண்ணிக்கைக் கொண்டவர்கள்தான். வராதவர்கள் வருவதேயில்லை. இதனை மாற்றப்பிரசார தோரணையையே மாற்றவேண்டும். பழைய முறையில் எத்தனை பேசினாலும் பயனில்லை. மக்களுக்கு எளிதில் படும்படியாகப் பேசினால்தான் சரி. இல்லாவிடில் பயனில்லை. இந்த முறையைக் கையாளவேண்டும்.

பெரியபாளையத்தில் சென்றபோது ஒருசிறு பாடசாலையின் முன்னர் கொடிகள் கட்டப்பட்டிருந்தன. 'என்ன செய்தி' என்று பிள்ளைகளைக் கேட்டபோது "மரித்தெழுந்த திருநாள்" கொண்டாடுகின்றோம் என்றார்கள். உடனே முழுவிவரம் அறிந்துகொண்டோம். அவர்கள் எல்லாம் ஹரிஜனங்கள். விவிலியம் புகுந்து சமயப்பற்றுப் பெற்றுச் சிறிது படிப்பும் பெற்றிருக்கிறார்கள். ஆனால் அடுத்திருந்த குரக்கத்தளி என்ற வைப்புத் தலமோ பாழடைந்திருந்தது. இடத்தைத் தேடித்தான் கண்டு பிடிக்கவேண்டியிருந்தது. இது ஒன்றே உண்மை நிலையை அறிவிக்கிறதில்லையா?

---

1. திருமாற்பேறு

1. இடம் :— இந்தத் தலம் இப்போது திருமால் புரம் என்று வழங்குகிறது. இந்தத் தலம் காஞ்சி அரக்கோணம் பாதையில் பனூர் நிலையத்திற்குத் தென்மேற்கே இரண்டரைக்கல் தொலையில் இருக்கிறது. வண்டி கிடைக்கிறது. கடினம். வழியில்வெகு தொலைவு மணல்வெளி. பழைய பாலி ஆற்றின் மணலை இருமுறை கடக்கவேண்டும். ஊர் விசாலமானது. நெசவுத்தொழில் மிகுதி. ஊருக்கருகில் ஒரு பெரிய புளியந்தோப்பு இருக்கிறது. அது கோயிலுக்குச் சேர்ந்தது. ஒரு சத்திரம் திருப்பணி வேலைக்கும், அலுவலகத்திற்கும் பயன்படுகிறது.

2. கோயில் :— பழைய கோயில் இடிக்கப்பட்டுப் புதிதாகத் திருப்பணி செய்யப்பட்டுள்ளது. கல்வெட்டுள்ள பழைய கற்கள் வெளியே கிடக்கின்றன. புதுக்கோயில் அமைப்பு வெகு வெளிச்சம் உள்ளதாக இருக்கிறது. அது ஊருக்கு மேற்குக் கோடியில் இருக்கிறது. முன் கோபுரம் பழுதுபார்க்கப்படவேண்டும். ஒரு பெரிய தெப்பக் குளம் இருக்கிறது. ஆனல் செப்பனிடப் படவில்லை. கோயிலுக்குள் கருவறை முன் மண்டபங்கள் மட்டும் ஒரு செட்டியாரால் திருப்பணி செய்யப்பட்டுள்ளன. மகா மண்டபம் இன்னும் கட்டப்படவில்லை. கும்பாபிஷேகத்திற்காக ஒரு தகரக் கொட்டகை போடப்பட்டது. அம்மன் கோயில் இன்னும் கட்டப்படவில்லை. அம்மன் கோயிலிலும் கல்வெட்டுக்கள் இருக்கின்றன. ஸ்தூபி கருங்கல் வேலை.

3. மூர்த்திகள் :— சுவாமி பெயர்கள் : மால்வணங்கீசர், மணிகண்டேசர் ; தேவியின் பெயர்கள் : கருணைநாயகி, அஞ்சுனயகியம்மை. துவாரபாலகர்கள் பெரிய உருவங்கள். கோயிலினருகே நந்தவனமும் பசுமடமும் உண்டு.

4. ஐதீகங்கள் :— திருமால் பூசித்துப் பேறு பெற்ற காரணத்தினல் திருமாற்பேறு என்று தலத்தின் பெயர் ஏற்பட்டது. இங்குத் திருமால் பகைவரை வெல்லும் பொருட்டுச் சக்கராயுதத்தைப் பெற விரும்பி இறைவனைப்

பூசித்து வருகையில் ஒருமலர் குறையத் தன் கண்ணை இடந்து அர்ச்சித்து சக்கரதானம் பெற்ருர். சம்பந்தர் திருக்கடைக்காப்பில் "மண்ணி மாலொடு சோமன் பணிசெயும்" என்றும், அப்பர் குறுந்தொகையில் "பொருமாற்றின் படை வேண்டி நற்பூம்புனல், வருமாற்றின் மலர் கொண்டு வழிபடும் கருமாற் கின்னருள் செய்தவன்" என்றும் கூறுவதைக் காண்க. இக்கோயிலில் திருமால் சுவாமிக் கெதிரில் நின்றுகொண்டு வழிபடுகிருர்.

5. ஆறு:—பழைய பாலியாறு. வெறும் மணல்வெளி தான். ஆனல் இடையிடையில் பசும்புல் இருக்கிறது—ஊரில் துரௌபதி கோயில் தனியாக இருக்கிறது. பளூரில் ஒரு சிவாலயம் இருக்கிறது.

6. திருப்பாடல்கள் :—சம்பந்தர் பாடல்கள் இரண்டும், அப்பர் பாடல்கள் 4 பதிகங்கள் உண்டு. இத்தலத்தில் தான் அப்பர்

"சாத்தி ரம்பல பேசும் சழக்ர்காள்
கோத்தி ரமுங்குலமுங் கொண்டென் செய்வீர்
பாத்தி ரஞ்சிவ மென்று பணிதிரேல்
மாத்தி ரைக்குள் அருளுமாற் பேறரே"

என்ற சிறந்த செய்யுள் இருக்கிறது. "அடியார் செய்த அனுசாரம் பொருத்தருளுவார்" என்றும் கூறுகிருர். தல புராணம் அச்சாகவில்லை. இந்தக் கோயிலைப்பற்றிக் காஞ்சி புராணத்தில் ஓர் அத்தியாயமிருக்கிறது.

7. கல்வெட்டுக்கள் :—இத்தலத்தில் 83 கல்வெட்டுக்கள் இருக்கின்றன. இவைகளில் சோழர் கல்வெட்டுக்கள் பெரும்பாலானவை ; பல்லவ அரசர்களுடைய கல்வெட்டுக்களும் இருக்கின்றன. பல்லவனுடைய மகள் விஜ்ஜவை மாதேவியார் இரண்டு விளக்குகளைத் தானம் செய்த செய்தி மிகவும் பழமையானது. பார்த்தி வேந்திர வர்மன் காலத்தில் அனயமான் என்ற விராட மன்னன் கோயிலும் பிராகாரமும் கட்டினனும். மதுராந்தகச் சோழன் மகன் கண்டராதித்தியனுடைய கல்வெட்டுக்களும் தானங்களும் நிரம்ப இருக்கின்றன.

சோழர் காலத்தில் இவ்வூர் ஜயங்கொண்ட சோழ மண்டலத்துத் (தொண்டை) தாமல் கோட்டத்து வல்ல

நாட்டுத் திருமாற் பேறுடையார் கோயில் என்று கூறப்பட்டுள்ளது. இறைவன் பெயர்களில் திருமாற் பேறுடையார், உத்தம சோழீசுவர முடையார், அவிமுத்தீசுர முடையார் என்று கண்டிருக்கிறது. குலோத்துங்கன் III நாளில் உத்தம சோழீச்சுரம் உடையார் உருவத்தை ஒரு சேதிராயன் பிரதிட்டை செய்தானும். கண்டராதித்தர் ஒவ்வொரு திங்களும் இறைவனை 108 குடங்கொண்டு திருமுழுக்குச் செய்வதற்கு ஏற்பாடுசெய்தாராம். கண்டராதித்தனுர் கோயிலில் குற்றம் செய்தாரைத் தண்டித்ததாகத் தெரிகிறது.

அக்கிலீசுவரர் கோயிலில் குற்றஞ் செய்தவர்களைத் தண்டிக்க ஒரு பஞ்சாயத்து ஏற்படுத்திஞராம்.

காஞ்சிபுரத்தில் அரசன் இருந்தபோது குற்றவிசாரணை செய்து அரசன் தண்டனை விதித்தானும்.

மற்ருெரு கல்வெட்டில் இராஜராஜன் I தேவியின் பெயர் சோழமா தேவியார் என்ற பஞ்சவன் மாதேவியார் என்று காண்கிறது.

இராஜராஜன் I காலத்தில் (985 - 1085) பாலாற்று வெள்ளத்திஞல் நிலங்களில் மணல் மேவ அதனை எடுத்து விட உத்தரவு இடப்பட்டதாம். அக்கல்வெட்டு 18 நாட்டின் ஸ்ரீவைணவர்கள் என்ற பெயர் இருக்கக் காண்கிறோம்.

ஒரு கல்வெட்டில் நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழி ஓதுவதற்குத் தருமம் செய்யப்பட்டதாம். கோவிந்தப்பாடியில் உய்யக்கொண்டார் கோயில் இருந்ததாம்.

இராஜராஜன் காலத்தில் (985 - 1013) கோவிந்தப்பாடி ஆழ்வார் மீது "கோலனுர் குழல்" என்ற திருப்பதியத்தை ஒருவர் பாட அதை திருவிழாவின்போது பாடுவதற்கு அவருடைய மகன் குலக்குடையான் அருணிலை ஸ்ரீகிருஷ்ணன் மூவேந்தபிடலூர் வேளார் என்பான் பொன் தானம் செய்தானும். அக்காலத்தில் அனுமதேவர் தாபிக்கப்பெற்றதாம்.

வல்லை நாட்டுக் கோவிந்தப்பாடி எது என்று தெரியவில்லை. இன்னும் பல செய்திகள் இக்கல்வெட்டுக்களில் கூறப்பட்டுள்ளன.

---

2. அணியண்ணுமலை

[அ. தா. ப. திருஞானசம்பந்தம், திருவண்ணுமலை]

இடம்:—விழுப்புரம் சந்திப்பில் இருந்துக் காட்டுப்பாடி சந்திப்பிற்குச் செல்லும் இருப்புப்பாதை வழியில் அமைந்திருப்பதே திருவண்ணுமலை என்னும் திருத்தலமாகும். தமிழ் நாட்டில் உள்ள தெய்வ சிந்தனை உடைய அனைய பெருமக்களும் இத்திருத்தலத்தை நன்குணர்வர். இத்தலத்தைத் தேடிச்சென்று இறைவன் திருவடிகளை ஏத்தி வழிபட்ட மக்களுடைய வினையை நீக்கி யோடச்செய்து, அருள்பாலிப்பன் அண்ணல் என அன்றே ஒரு பேரறிஞர் கூறியுள்ளார். இறைவனே மலையுருவாய் நின்று காட்சி அளிக்கிருன் என்பது வரலாற்று உண்மை. இம்மலையை வலம் வருவதற்கு நன்ருகச் செப்பனிடப்பெற்ற பாதையுள்ளது. தலயாத்திரை மேற்கொண்டு வருவோர் மலை வலம் செல்லாது, வேற்ரூருக்குச் செல்வதில்லை. இதைச் சுற்றி வருந்தூரம் சுமார் 8 மைல் ஆகும். இம்மலையைச் சுற்றி வந்து இறைவன் இன்னருட் பேற்றிற்கு இலக்கான வர்கள் பலராவர். அவருள் முதற்கண் அமைத்துச் சிந்திக்க வேண்டுபவர்கள், சமய குரவர்களான, அப்பர் பெருமான், ஞானசம்பந்தப் பிள்ளையார், மாணிக்கவாசக அடிகளார், குகை நமசிவாய தேசிகர், குரு நமசிவாய தேசிகர் ஈசான தேசிகர் ஆதிதெய்வ சிகாமணி அருணுசல தேசிக பரமாசாரிய சுவாமிகள், சிவப்பிரகாச அடிகளார், முதலானோராவர். இம்மலையில் உடற்பிணி போக்கி, உரம் அளிக்கும் மூலிகைச் செடிகள் வகைவகையாய் உள்ளதென இன்றும் மருத்துவ நிபுணர்கள் கண்டாய்ந்துப் புகல்கின்றனர்.

இம்மலையைச் சுற்றிச் செல்லும் பாதை, சரித்திரப் பிரசித்தி பெற்ற செங்கம் என்ற சிற்றூர் செல்லும் பாதையோடிணைந்து சென்று, டோங்குபுரி மண்டபம் என்ற இடத்தில் இருகிளைகளாகப் பிரிகிறது. நேர்பாதை செங்கத்திற்கும், கிளைப்பாதை அணியண்ணுமலைக்கு அல்லது மலையை வலம் வருதற்குச் செல்கிறது. எல்லா ஊர்களிலும் இல்லாத அளவில் திருவண்ணுமலைக்கு ஒரு தனிச் சிறப்பு இருக்கிறதெனின், அதுதான் சமீபித்து சமீபித்து

ஒரு கோவில் - அதனுள் இலிங்கப் பிரதிட்டை - அதனை அடுத்து ஒரு தீர்த்தம். மலைவலம் வருதற்குள்ளாக மொத்தம் 360 தீர்த்தங்கள் காணலாம். அஃதேபோல் ஏறக்குறைய பெரியதும், சிறியதுமான 400 சிவலிங்கப் பிரதிட்டை செய்யப்பெற்றத் திருக்கோயில்களையும் காணலாம். மலையைச் சுற்றி வரக் கிளைப் பாதையை அடைந்து, மேற்செல்லின் சோணநதி தீர்த்தம், நிருதிலிங்க தீர்த்தம், உண்ணாமுலை யம்மன் தீர்த்தம், பழனி ஆண்டவர் திருக்கோவில், கௌதமர் ஆசிரமம் இவைகளைக் கண்ணுறுவோம். இவைகளைக் கடந்த பின்னர் ஒரு எடுப்பான, பல வர்ணங்கள் தீட்டப்பெற்றுக் கண்ணைக் கவரும் திருக்கோபுரம் ஒன்று தோன்றும். அஃதே அப்பர் பாடிப் புகழ்ந்து, வந்தித்த அணியண்ணாமலையான்வதியும் திருக்கோயிலாகும். இன்று மக்கள் அடியண்ணாமலை எனவே அழைத்து வருகிறார்கள். இதன் தூரம் சுமார் புகைவண்டி நிலையத்தினின்றும் 6 கல் எனலாம்.

கோவில் :—அதிகப் பெரிய கோவிலும் அல்ல; மிகச் சிறிய கோவிலும் அல்ல ; நடுத்தரமான கோவில் எனலாம். கோவில் விஸ்தீரணம் சுமார் 7 ஏக்கர்தான் இருக்கும். இக்கோவில் மிகப் புராதனமானதென்று தெரிய வருகிறது. இக்கோவிலில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் பிரம்மாவால் பிரதிஷ்டை செய்யப்பட்டவன் என வரலாறும், சொல்லக் கேட்டு அறிந்தோரும் கூறுவதால் தெரிகிறது. கல்வெட்டு இதனைப் பற்றிய விரிந்த கருத்தொன்றும் தராமல் விடுகிறது. ஒரு காலத்தில் பிரம்மாவும். விஷ்ணு மூர்த்தியும், தங்களுக்குள் யார் பெரியவர் என்றதோர் சச்சரவை எழுப்பிக்கொள்ள அதற்கொரு முடிவேதுங் காணாது திகைத்த இவ்விரு மூர்த்திகளும், அண்ணாமலை அண்ணலிடம் சென்று தங்கள் சச்சரவிற்கு முடிவை ஆய்ந்து கூறவேண்டுமென்று முறையிட்டனர். அதற்கு ஏழுண்டத்திற்கும், அப்பாலுக் கப்பாலாய் நிற்கும் அண்ணல், தன் அடியையோ அன்றி முடியையோ கண்டு மீண்டோரே பெரியராய் விளங்குந் தன்மை பெறுவர் எனலும், இதைக்கேட்ட பிரம்மா, அன்னவடிவ மேடுத்து முடியையும், விஷ்ணு மூர்த்தி கேழலாக வடிவெடுத்து அடியையுங் காணப் புறப்பட்டனர். இருவரும் தங்கள் பெருமுயற்சியை

கல்கிஎடுத்தகாரியத்தில் வெற்றிகாண முயன்றனர். முயற்சி பலன் அளித்ததோ? அதுதான் இல்லை! முடிவில் பெருந் தோல்வியே கண்டு மனமுடைந்தனர் என்பது புராண வரலாறு. இதனோடு இதைப் புராணக் கூற்றென விடுதற் கில்லை. முப்பெருஞ் சமயச் செல்வர்களான சம்பந்தர், அப்பர், மணிவாசகர் கருத்துக்கள் மேற்கூறிய வரலாற்றிற்கு அரண் செய்கின்றன.

" தேடிக்காணுர் திருமால் பிரமன்றேவர் பெருமானை "
—சம்பந்தர் தேவாரம்

" ஞால முண்டானொடு நான்முகன் வானவர் நண்ணரிய "
" திருமாலும் பன்றியாய்ச் சென்றுணராத் திருவடியை "
—திருவாசகம்

" மாலுநான் முகனுங்கூடி காண்கிலா வகையுண்ணின்ருய் "
—அப்பர் தேவாரம்

இங்ஙனம் பிரம்மா தன்னையும் தன்னுடன் போட்டி யிட்டத் திருமாலையும்விட உயர்வுடைய பெரியோன் அண்ணுமலை அண்ணல்தான் என்பதைத் தெளிவாக அறிந்து, மலையின் பின்புற அடிவாரத்திலேயே, ஒரு இலிங்கப் பிரதிஷ்டை செய்து, வழிபட ஆரம்பித்தார். இங்ஙனம் சிலகாலம் வழிபாடியற்றிவர, இதனைக் கண்ட வேண்டத் தக்கதறிந்து, வேண்ட முழுதும் அருளும்படியான அண்ணுமலை அண்ணல்அருள் பாலித்துத் தன் மெய்வண்ணங்காட்டினுர். பின் அசரீரியாக சில மொழிந்தார். " பிரம்மனே! உன் வழிபாட்டிற்கு மிக மிக மகிழ்ந்தோம். நாம் சுயம்பு வடிவமாய் முற்புறத்தில் தோன்றியுள்ளோம் எனக் கூறி உண்மையை அறிவுறுத்தினுர் " என பழைய ஏடுகளைத் தெள்ளிதின் கற்ருய்ந்த சிந்தையால் உயர்ந்தோர் கூறும் மொழியாகுமிது. அதுகாலை தொடங்கி சுயம்பு மூர்த்தியே' பேராட்சியில் இருந்து வருகிறது. இச்சுயம்பு இலிங்கத்திற்குப் பெரிய கோபுரங்களும், மதிற்சுவர்களும், மண்டபங்களும் எடுத்தவர்கள் விஜயநகரத்து அரசர்களும், சோழ அரசர் பரம்பரையில் வந்த பெருமக்களும் அரசர் களுமாவர். இக்கோவிலை ஊரின் திருமுகமாக வைத்தெழுந்ததே திருவண்ணுமலையாகும். இதற்குப் பல ஆண்டுகள் முன் தோன்றியதே அணியண்ணுமலை (இன்று

அடியண்ணுமலை) யாகும். இங்குள்ள திருக்கோவிலைப் பெரிய கோவிலாக ஆக்கித் திருப்பணி செய்த பெருமை நாட்டுக் கோட்டை நகரத்துச் செட்டிமார்களைச் சார்வ தாகும். இங்குக்கோயில் கொண்டுள்ள அண்ணல்: அண்ணு மலையார் (அருணுசலேஸ்வரர்); அம்மை: உண்ணுமுலை யம்மன் (அபீதகுசாம்பாள்); இக்கோவில் திருமூர்த்தங் களுக்கு, காலபூசை தவருது நடைபெற்று வருகிறது.

தீர்த்தம் :—கோவில் மதிற்புறத்திற் பக்கலில் ஒரு தீர்த்தமுண்டு. அதை பிரம்ம தீர்த்தமென்பர். இக்கோவி லுக்கு அருகாமையில் பெரியதோர் தீர்த்தமுளது. அதனை மக்கள் மாணிக்கவாசகர் தீர்த்தம் என அழைக்கின்றனர். அத்தீர்த்தக் கரையின்பால் மாணிக்க வாசகர் உருவம் பிரதிட்டை செய்யப் பெற்றிருக்கிறது. மிகப் பழைய உருவமாகத் தென்படுகிறது. மலை சுற்றி வரும் பல யாத் ரிகர்கள் இதனைக் காணுமலே விபரம் அறியாமலே செல் கிருர்கள் எனத் தெரிகிறது. மாணிக்கவாசகர், முகப் பொலிவுடன் நின்ற வண்ணம் அருளுங் காட்சி எஃகு மனத்தராயினும் சற்று உருகச் செய்யும் என்பது எம் நம்பிக்கை. இவ்விடத்தில் வந்தே பெருமாணுர், திருவெம் பாவையும், திருவம்மானையும் பாடியுள்ளார். திருவெம் பாவையில் 11ம் பாடலில் "மொய்யார் தடம் பொய்கை" என்று குறிப்பிடுவதும் 13-ம் பாடலில் பங்கயப் பூம்புனல்" என்று குறிப்பிடுவதும் மேற் கூறப்பெற்ற தீர்த்தமேயென சமயக்கலை வல்லார் பலருங் குறிப்பிடுகின்றனர்.

விழாக்கள் :—விழாக்கள் நடைபெருத மாதமே கிடையாது. அணியண்ணுமலையில் விரிந்த அளவில் விழாக் கள் நடைபெறுவதில்லை. விசேட நாட்களில் இவ்வூர் மக் களும், அயலூர் மக்களும், மலை சுற்றச் செல்லுங்கால், அன்று அக்கோவிலில் பெருவிழா நடைபெறுவதாகத் தோன்றும். அதிக விமரிசையாக விழாக்கள் முதலியன வெல்லாம் சுயம்பு இலிங்கத்திற்கே நடந்தேறி வருகிறது. அணியண்ணுமலையும் அண்ணுமலையார் தேவஸ்தான அறி வுரை மன்றக் குழுவினரால் பரிபாலிக்கப்படுகிறது.

ஐதீகம் :—ஞானப் பேருரை அடைய ஒருவர் பவக் கடல் நீந்துங்கால், ஊறு நேராது செல்வதற்குக் கலங்கரை

விளக்கமாக அண்ணுமலை அமைகிறது. அதனையே விளக்குவது "கார்த்திகை திருவிளக்கேற்றுதல்" என உட்பொருளாய் உளத்தர் சிந்தித்துங் கூறியும் வருகின்றனர். ஒருவருக்கு ஞான நாட்டத்தில் ஈடுபடவேண்டுமென்ற விழைவு தோன்றியவுடனே இச்செம்மலை அழைக்கும் என்பதை "ஞானத் தபோதனரை வாவென் றழைக்குமலை" என அன்றே அறைந்தார் குருதேவர்.

பாடல்கள் :—அண்ணுமலைக்கு, சம்பந்தர் பெருமான் அருட்பாடல்கள் உண்டு; மாணிக்கவாசகர் பெருமான் மெய்ப்பாடல்கள் உண்டு; தாண்டகவேந்தரின் தவப் பாடல்கள் உண்டு; ஆனுல் திருநாவலூர் முதுபெரும் தமிழ்ச் செல்வமான சுந்தரர் பெருமானின் செந்தமிழ்ப் பாடல் ஒன்றுங்காணேம். காரணம் அறிய இயலவில்லை.

"மண்ணார்ந்தன வருவித்திரண் மழலைமுழ வதிரு
மண்ணுமலை தொழுவார்வினை வழுவாவண மறுமே"

"முதிருஞ்சடை யிளவெண்பிறை முடிமேல்கொள வடிமேல்
அதிருங்கழ லடிகட்கிட மண்ணுமலை யதுவே"

—சம்பந்தர் தேவாரம்

"அண்ணு மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணேர் முடியின்மணித் தொகைவீறற் றூற்போல்"

"கண்ணார் கழல்காட்டி நாயேனை ஆட்கொண்ட
அண்ணு மலையானைப் பாடுதுங்காண் அம்மானாய்."

மாணிக்கவாசகர்

"ஆதியே யமரர்கோவே யணியணுமலை யுளானே
நீதியா னின்னையல்லா னினையுமா நினைவிலேனே"

"அருவி பொன்சொரியு மண்ணுமலையுளா யண்டர்கோவே
மருவிநின் பாதமல்லான் மற்றொரு மாடிலேனே."

"பைம்பொனே பவளக்குன்றே பரமனே பால்வெண் ணீற்றாய்
செம்பொனே மலர்செய் பாதா சீர்தரு மணியே மிக்க
அம்பொனே கொழித்து வீழும் அணியணு மலையு ளானே!
எம்பொனே யுன்னை யல்லால் யாதுநா னினைவி லேனே!"

—நாவரசர் தேவாரம்

———

உலகம்

(அ. நா. ப. திருஞானசம்பந்தம்)

ஒரு நடுத்தரப் பள்ளியில் பயிலும் மாணவனை நடு இரவில் எழுப்பி உலகம் என்று நினைப்பூட்டினால் அது உருண்டை என்று தட்டுத்தடங்கல் இல்லாமல் சொல்லி முடிப்பான். அவன் உள்ளம் கள்ளமற்று, உலகியல் அலை மோதாக் காரணத்தால் தூய்மையாய் உள்ளதல்லவா? அங்கே வம்பு வார்த்தைகள் வக்கணையிட்டுப் பேச வாய்ப் பேது? உழைக்காது பிறர் கைப்பொருளில் சொகுசாக உண்டு உடுத்தி வாழும் ஒருவரைக் கண்டு, உலகம் என்று அவரிடம் மறந்து பேசினாலும் 'என்ன பாழும் உலகம்; வாழ வகையற்றுக் கிடப்பவர்களுக்கு நல்வழி காட்ட மறுக் கிறது' என்று வீண் வாய்ப் பேச்சில் நிறுத்துவார். உழைத்து உள்ளம் வாடி, உறக்கமின்றி, சதை சரிந்து ஊக்கங் கெட்டு ஏர் பின் செல்லும் இன்றைய உழவனிடம் சென்று என்ன உலகமோ இது! என்று சுட்டிக்காட்டி விட்டால், அந்த உழவன் பின்வருமாறு வகையாக வசை பாடி மனந்தளர்வான். 'மழையின்றி மாநிலத்தார் படும் பாடு சொல்ல முடியவில்லை! மாரியல்லது காரியமில்லை அன்றோ! இன்னும் கொஞ்ச நாளிலாவது வானம் பெய் யாது விட்டுப் போய்த்தால், உலகம் கெட்டுப் பாழாய் உலுத்துப் போய்விடும்' என்பான். இவையெல்லாம் இன்று கண்ணளவில் காணுங் காட்சிதான். கற்பிக்கும் கதை அன்று. ஒவ்வொருவர் திறத்திற்கேற்ற வண்ணம், பழகும் சூழ்நிலைக்கு ஏற்ப, செய்யும் தொழிலுக்கு ஏற்ப கருத்துகள் தோன்றவோ, மாறவோ, செயலாற்றவோ செய்கின்றன.

மனத்தால் பண்பட்டு மங்காது வாழும் மாணவன் படித்ததைப் பளிங்குபோன்ற உள்ளத்தில் பதியவைத்துத் தன் கருத்துக்களைப் பகட்டில்லாமல் பகர்கிறான். பிறர் பொருளால் தன்னலம் துய்த்து வாழும் ஒருவன், தான் வேலைசெய்யாது பிறரை ஏய்த்துவாழப் பற்பல புதுவழிகள் தோன்றவில்லையே என்று உலகத்தை வெறுத்தும் பேசு

கிருன். மாணவன் நோக்கு உலகம் உருண்டை என்பது; ஏய்த்து வாழுபவன் நோக்கு உலகில் பலர் ஏய்ப்புக்கு உட்பட்டவர் இருத்தல் வேண்டும் என்பதாகும். ஆனல் உழவன் நோக்கோ? உலகமக்கள் நல்வாழ்வு பெற்று நாளும் சிறந்தோங்க வேண்டும் என்பதே. இதுவரை மூவர் உலகை எக்கண் கொண்டு நோக்குகிருர்கள் என்பதையும் அவர்களின் திட்டமிட்ட குறிக்கோள் என்ன என்பதையும் பற்றிக் கூறினேம். இதுவரை கூறியது நடைமுறை உலகில் காண்பதாகும். இனி நாம் மூவகைப்பட்ட மக்களேக் கவிஞர் உலகத்தினின்றும் காண்போம். கவித்திறம் படைத்த வித்தகச் செம்மல் கம்பன், வெண்பாவிற்கே உரியவரான புகழேந்தி, இன்னேரன்ன புலவர்கள் எல்லாம் மாணவர் வகையில் நின்று உலகை நோக்குபவர்கள். ஆற்றலே அழிக்கும் அந்தாதி, ஆளேமயக்கி வீழ்த்தும் யமகம் கோர்வைக் குறிப்புக்களான கோவைகள், உதவாத உலாக்கள் இவை போன்ற நூல்களேப் பாடவந்த பெரும்பாலான புலவர் பெருமக்கள் உலகை நோக்கும் விதம் சோம்பற்பட்டவன் வாழும் வகையையும் நோக்கத்தையும் ஒத்திருக்கும். சைவத்திற்குக் கலங்கரை விளக்கமான பெரியபுராணம் அளித்த சேக்கிழாரடிகள் குவலயம் புகழும் குறளெனும் அருநிதியை அளித்த அருமைப்புலவர் வள்ளுவர் போன்ருர் உலகம் பற்றிய நோக்கெல்லாம் உழவன் நோக்காய் அமைகிறது. இவர்களெல்லாம், உயர்ந்த எண்ணங்களில் தங்கள் கருத்துக்களேச் செலுத்தி, நாட்டு மக்களுக்கு அலேகடலில் கடைந்தெடுத்த அமுதமென உண்மையை அள்ளி வழங்குகின்றனர். இதில் தடையும் நிகழுமாமோ! உழவன் பண்பட்ட உள்ளத்தில் தோன்றும் உத்தம எண்ணமும் இத்தகைய தன்ரே?

நுண்ணறிவு வாய்ந்த நூல்கள் இயற்றவந்தகாலே புலவர்கள் பெரும்பாலும் உலகம் என்றசொல்லே முதற்கண் அமைத்திருக்கின்றனர். சொல் ஒன்றேயாயினும், அவ்வவர்கள் நிலேக்கும், தன்மைக்கும் ஏற்ப அச்சொற்களே ஆண்டிருக்கின்றனர் என்பது நூலில் அமிழ்ந்து செல்லுங்கால் உண்மை புலனுவது நிச்சயம்.

உலகெலா முணர்ந்து ஓதற் கரியவன் —சேக்கிழார்
உலகம் யாவையும் தாமுள வாக்கலும் —கம்பர்

உலக முவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாங்கு —நக்கீரர்
மலர்தலை யுலகில் மல்கிருள் அகல —நன்னூலார்

இனி நாம் ஒரு புலவரிடம் செல்வோம். அப்புலவர் யார்? அவர்தான் புகழேந்தி! இவர் எங்ஙனம் உலகத்தை நோக்குகிறார் என்பதைக் காண்க. இவர் ஆழ்ந்த சிந்தனையாளர்தான்! கருத்தில் கவினும், நினைப்பில் உயர்வும் இவரிடம் இருப்பதைக் காணலாம். யாவரும் நோக்கும் வகையில் இவரும் உலகை நோக்கினும், ஓர் உதாரணங் காட்டி உலகிடை வாழ மக்கட்கு உண்மையை அறிவிப்பது இன்பத்தையே அனைவருக்கும் எழுப்பும். புலவர் நவில முடியாத நற்பண்புகள் வாய்ந்த நள மன்னனுடைய ஆட்சியைப்பற்றிப்பேச வருகிறார்; அதற்கு உயர்வு கற்பிக்கிறார். அவ் வுயர்வைக் கூறுங்காலத்து, உலகினர்க்கு உண்மையைப் புகட்டுகிறார். நளமன்னன் ஆட்சியில் மக்கள் வேற்றுமையின்றி ஒருவரோடு ஒருவர் இன்புற்று வாழ்ந்தனர் என்பதற்கு உதாரணங் கூறும் பொழுது மாடற்பருந்தையும், பசுங்கிளியையும் உவமிப்பது பெருமித நீர்மையது.

சீதமதிக் குடைக்கீழ் செம்மை யறங்கிடப்பத்
தாதவிழ் பூந்தாரான் றனிக்காத்தான்—மாதர்
அருகூட்டும் பைங்கிளியும் மாடற் பருந்தும்
ஒருகூட்டில் வாழு முலகு.

உலக மக்கட்கு உதாரணமுகத்தால் உண்மையைக் கற்பிக்க வந்த புலவர் தம் புலமையின் திறனால் எளிமையான சொற்களைப் பயன்படுத்தி விளங்க வைத்து இன்பமூட்டுகிறார். நிற்க. இவர் உலகம் என்று குறித்தது பொதுவகையில் மக்கள் எல்லோரையும் குறிப்பதாகும். இதற்கப்பாற்பட்ட பார்வையில் உலகம் என்பது எது? என்று ஆழ்ந்து கண்டு, உண்மையை அறிவுறுத்தி உறுதியாக உய்யும் வழியை உயர்வுடன் வகுத்தளித்தவர்களிடம் செல்வதன்றோ நம் நோக்கம். அவர்களைத் தேடிக் கண்டு, அவர்கள் பொருளுரையாது எனக் காண்போம்.

நந்தம் மொழியில் பண்டு சிறப்புடன் பொலிந்த நூல்கள் எண்ணில. அவை அனைத்தும் பலவழிகளில் அழிந்தன.

இருப்பினும் நமக்குக் கிடைத்திருக்கும் தொன்மை நூல் ஒன்றுண்டு. அதுவும் இலக்கண நூல்தான். அந்நூலே தொல்காப்பியமாகும். தொல்காப்பியர் உலகத்தை எந் நோக்கில் உற்றுக் காண்கிறார் என்பதைக் காண்க.

'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே'

—தொல்காப்பியம்

உலகிடைவாழ் அனைய மக்களையும் ஒன்று கூட்டிச் சேர்த்து உலகம் என்ற சொல்லிற்குப் பொருள் கண்டாரில்லை. கல்வி கேள்விகளில், குணநலன்களில், செயற்கரிய செயல்கள் புரிவதில் வல்லமை பெற்ற பெருமக்களின் கூட்டத்தின் ஈட்டத்தையே உலகம் என்று விளம்புகிறார்.

முன்னர் கூறிய இலக்கண நூலைக் கடைக்காலாகக் கொண்டெழுந்த இலக்கியமே திருக்குறளாகும். இந்நூற் பெரும்பேராசான் "உலகம்" என்ற தீந்தமிழ்ச் சொல்லைத் தம் குறட்பாக்களில் பலவிடங்களில் ஆண்டுள்ளார். உலகம் என்ற சொல்லை முதற்கண் அமைத்து உண்மையைப் புகட்டுமிடங்கள் மூன்று தோன்றுகின்றன. அவ்வதிகாரங்கள் ஆவன :— ஒழுக்கமுடைமை, அறிவுடைமை, புல்லறிவாண்மை என்பவையாம். இம் மூன்று இடங்களும், சிந்தித்தற்குரியவை. சொல்வைப்பு முறை அதிகார வைப்பு முறையின்கண் அமைத்துப் பா இயற்றியிருப்பதைக் காணுங்கால் உண்மை தெற்றெனப் புலனாகும்.

உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றும்
கல்லா ரறிவிலா தார். —(குறள்–10. அதி. 14)

(பொ–ள்) உலகத்தோடு பொருந்த ஒழுகுதலைக் கல்லாதார் பலநூல்களையுங் கற்றாராயினும் அறிவில்லாதவரேயாவர். உலகத்தோடு பொருந்த ஒழுகுதலாவது, உயர்ந்தோர் பலரும் ஒழுகியவாற்றான் ஒழுகுதல் என்பதாம். அறநூல்கள் சொல்லியவற்றுள் இக்காலத்திற்கு வேண்டாதன தள்ளி வேண்டுவன கொண்டு வாழ்தலே அறிவுடைமையாம். இக்குறளில் உலகம் என்ற சொல்லிற்குப் பொருள் காணவந்த பரிமேலழகர் உயர்ந்தோர் எனக் கூறுதல் கொண்டு தெளிதற்பாலது நன்று.

ஒருவன் பலகலை கற்று, முதுபெரும் புலவனாய் விளங்கலாம். இருப்பினும் தன்னை அத்தகைய ஒரு நிலைக்குக்

கொண்டுவர உதவிய பெருமக்களையும் அன்னோர் நூற் பொருள்களையும் தவறு என எதிர்த்துங் கண்டித்தும், உயர் வுடைய மக்களின் உள்ளீடான நட்பை மறத்தலும் தகுதி யாகாது. அநுபூதிபெற்ற அத்தகு மக்கள் அனைவரும் நாட்டை நசுக்கி உலகை உதாசீனம் செய்யப் பிறந்தார்க ளில்லை. நாட்டின் உயர்வில் அவர்கள் கொண்டிருந்த நனி கருத்துக்களைவிட, 'இனி நாம் அதிகம் கொள்வோம், அல்லது நடைமுறையில் செய்துகாட்டுவோம் என்பதற் கில்லை. பெரியோர்கள் வாய்மொழிகளை ஏற்காது வாளா கிடந்தால் பெறும் பயனோ ஒன்றுமிலது. தீமைகள் பல சேர்ந்து அல்லலில் நடவாதவரை வாட்டும். பெரியோர்கள் கூறிய வழிகளில் நிற்க விரும்பாதவர்களை வள்ளுவப் பெருந்தகையார் என்ன கூறுகிறார் தெரியுமா? அவ ரெலாம் பேய்கள் என்றல்லவா பேராசிரியர் பேசுகிறார். இதைவிட வேறு எவ்வழியில் புலமைப் பெருமை உடையார் இகழ்ச்சி செய்வது? இதுவரை கூறிய கருத்துரைக் கேற்ற குறட்பாக்களைக் காண்க.

உலகந் தழீஇய தொட்பம் மலர்தலுங்
கூம்பலு மில்லா தறிவு. (குறள்–5. 43 அதி)

(கருத்து) உயர்ந்தோரை நட்பாக்குவதும், அவர்கள் நூல்களில் தோய்ந்த ஈடுபாடு கொள்ளச் செய்வதும் ஒளி பொருந்திய குணமாகும். அச் சிநேகிதனிடத்து முன்னர் மகிழ்தலும் பின்னர் வெறுத்தலும் இல்லாமல் ஒருநிலை உடையதாகி நிற்பது அறிவு என்பதாம்.

உலகத்தா ருண்டென்பதில் லென்பான் வையத்
தலகையா வைக்கப் படும். (குறள்-10 அதி. 85)

(கருத்து) அறிவுடைய பெருமக்கள் ஆய்ந்துகண்டது உண்டென்பதோர் பொருளைத் தன்னுடைய அறியாமை யால் இல்லை என்று சொல்பவன் மனிதனேயானாலும், அவன் இப்பூமியினிடத்துப் பேயாக வைத்து எண்ணப் படுவான் என்பதாம். மக்களைப் போன்று அவன் உருவத் தில் இருப்பினும் தான் கொண்ட கொள்கையே நெறி உடையதென்று எண்ணி, மற்றவற்றை மதியாது, பெரி யோர்களை அவமதித்து வாழும் முறையில் பேயாவான்.

பெருநாவலர் பலவிடங்களில் நற்கருத்துக்களை ஆழ்த்தி "உலகம்" என்ற சொல்லைப் பயன் படுத்தி அறிவிற்கு விருந்தளிப்பது பெருமித நீர்மையது. எவ்வளவோ இலக்கியப் புலவர்கள் சிறந்த சொற்களை ஆண்டாலும், வள்ளுவப் பெருந்தகையார் நுண்ணிய கருத்தாழம் அமைப்பதைப் போல அமைக்க இயலவில்லை என்று தயங்காமல் கூறலாம். இக் காரணத்தால் அவர்கள் பயனற்றவர்கள் என்பது பொருளல்ல. அறிவுத்துறையில் நுணுகி ஆய்வதில் திருவள்ளுவரே தலையாய இடம் பெறுகிறார் என்பது இதனால் போதரும். ஈரசைச் சீராலான உலகம் என்ற சொல்லை வேற்று எவ்வெவ் விடங்களில் பேராசிரியர் ஆண்டு பொருள் விளக்குகிறார் என்பதைக் கண்டு இன்புறுக! புலவன் வாக்கில் பட்ட சொல் பெறும்பேறு எவ்வளவு என்பது சொல்லத்தரமன்று.

---

4. சாத்திரப் பகுதி

சிவப்பிரகாசம் மூலமும் உரையும்

தருமையாதீனப் புலவர், சித்தாந்த ரத்நாகரம், வித்வான்
முத்து. சு. மாணிக்கவாசக முதலியார், ஆரணி.

(மலர் 25. இதழ் 4. பக்கம் 109 இன் தொடர்ச்சி)

மேல், அவனருளையின்றித் தனக்கெனச் சுதந்தரமாகச் செயலும் அறிவும் விருப்பும் இல்லையென்னும் உண்மையை அறியாத உயிர் அவனை இழந்து நிற்கும் முறைமைக்கு ஓர் எடுத்துக்காட்டருளிய ஆசிரியர், மற்றும் ஓரநுபவத்தைக் குறித்து அதனைத் தெளிக்கின்றார். அஃதாவது :—

சூஎ. அறிந்திடு மனதி வாயி லானவை யவன்ற னாலே
யறிந்திடு மென்றுமொன்று மறிந்திடா வவைபோல்யாவு
மறிந்திடு மறியுந் தன்மை யறிந்திடா கன்மத் தோன்மை
யறிந்தவை நகரு மாறுமருளுவ னமலன் றானே.

என்பது ஆன்மத் தத்துவங்க ளடங்கிய அந்தக்கரணங்கள் (மன முதலிய நான்கும்) இந்திரியங்கள் (பொறிகளாகிய

மெய் வாய் முதலிய வாயிலைந்தும்) ஆகிய எல்லாம் ஆன்ம சிற்சத்தி சேர்தலாலே அறிந்திடுகின்றன. அறிந்தும், நாம் ஆன்மாவா லறிகின்ரேம் என எதுவும் எப்பொழுதும் அறிந்திடுவதில்லை. தம்மையும் அறிவதில்லை. அவ்வாறே எல்லா ஆன்மாக்களும் பெத்தம் முத்தி யிரண்டிலும் பிரமேயம் அப்பிரமேயம் ஆகிய எல்லாவற்றையும் சிவசிற்சத்தி யுபகாரத்தாலேயே அறிந்து வருகின்றன. வரினும் அவ்வான்மாக்கள், தாம் அறிந்து வருமுறைமையையும் தமக்கு வியஞ்சக அறிவையின்றித் தாமே யறியுஞ் சுதந்தரமில்லாமையையும் அறியமாட்டா. (ஆன்மாக்கள் அறிந்தும் நுகர்ந்தும் வருகின்றனவே எனில்) இறைவன் அவ்வான்மாக்களினுடைய பழவினைகளை யறிந்து அறிவித்தலாலும் மலபரிபாகம் வரற்பொருட்டு நுகர்வித்தலாலும் அவை அவ்வினைப் பயன்களை அறிந்து நுகர்கின்றனவே யன்றித் தாமே சுதந்தரமாகச் செய்யவல்லன அல்ல. (இறைவன் ஆன்மாக்களுக்கு வினைப் பயன்களை நுகர்விப்பதனுல் தானும் வினைத் தொடர்பு (கன்மபந்தம்) அடையப்பெறுவான் என்னில் அது பொருந்தாது, (எவ்வாறு எனில்) அவ்விறைவன் அமலன் என்னும் பெயரினன். அஃது அவனுடைய எண்குணங்களுள் ஒன்ருய இயல்பாகவே பாசங்களினீங்கிய தூய்மையைக் குறித்தது. அதனுல், அவ்வினைத் தொடக்குறுதல் இறைவனுக்கில்லை என்பதாம்.

அவன் என்னுஞ் சுட்டு, மேல், உயிர், உளம், கொள்பவன், உண்டடவேண்டுவான், தனக்கென அறிவிலாதான், தத்துவ வன்னரூபன், அவன் (ஒழிந்து அத்திரள்களும் செயலிலா) எனப்பெற்ற ஆன்மாக்களைக் குறித்து நின்றது.

மேல், ' மருவிய பொறியில் ஒன்றும் ' என்னுந்தொடக்கத்துத் திருவிருத்தத்தால் உயிர் அறிந்து நுகருமாறுணர்த்தினுர், 'மனுதிகள் தம்மில் மன்னித் தருபயன் நுகர்தலான்' (௫௩) என்றதும் ஈண்டு நினைக்க.

"சொன்ன சிவன்கண்ணு வுளம் வினையாற் கண்டறிந்து நிற்கும்' என்றுயிர்மேல் வைத்துரைத்தாலும், 'கண்ணு' என்றதாற் சுதந்திரமின்மை இனிது புலப்படும்.

பொறிபுலன் காண மெல்லாம் புருடனு லறிந்தான் மாவை
அறிதாா அவையே போல ஆன்மாக்கள் அனைத்தும் எங்குஞ்

செறிதருஞ் சிவன்றனாலே அறிந்திடும் சிவனைக் காணா
அறிதருஞ் சிவனே எல்லாம் அறிந்தறி வித்து நிற்பன்.

என்னும் வழிநூற் றிருவிருத்தத்தை இப் புடைநூற்றிரு விருத்தத்தினோடு ஒப்புறுத்தி யுணர்தல் சாலத் தெளி வுண்டாக்கும்.

1. 'அறிந்திடு மனாதி வாயி லானவை அவன்றனாலே
அறிந்திடு மென்று மொன்று மறிந்திடா அவைபோல்'
—புடைநூல்

'பொறிபுலன் கரண மெல்லாம் புருடனா லறிந்துஆன் மாவை
அறிதரா சுவையே போல' —வழிநூல்

இதிற் புருடன் ஆன்மா என்னும் இரண்டும் ஒரு பொருள். புருடனாலறிந்து ஆன்மாவை அறிதரா என்ற தொடரில், புருடன் ஆன்மா என்றவற்றுள் யாதானு மொன்றனை ஈரிடத்துங் கொள்ளாது. அறிதற்கு மூன்றும் வேற்றுமை யேவுதற் கருத்தாவாகப் புருடனையும் அறி யாமைக்குச் செயப்படு பொருளாக ஆன்மாவையுங் கொண் டது குற்றம் போலத் தோன்றும்.

'ஒருபொருள் குறித்த வேறுபெயர்க் கிளவி
தொழில்வேறு கிளப்பின் ஒன்றிடன் இலவே'

என்றதில், தொல்காப்பியனார் ஒரு பொருள் குறித்த வேறு பெயர் கிளத்தலை மறுக்காது தொழில் வேறு கிளத்தலையே ஒன்றுமை நோக்கி மறுத்தார். அதனாற் குற்றமன் றென்க.

2. யாவும் (புடைநூல்) ஆன்மாக்களனைத்தும் (வழிநூல்)
3. அறிந்திடும் (புடைநூல்) 'எங்குஞ் செறிதருஞ் சிவன் றனாலே அறிந்திடும்' (வழிநூல்)
4. அறியுந் தன்மை யறிந்திடா (புடைநூல்) சிவனைக் காணா (வழிநூல்)
5. கன்மத்தொன்மை அறிந்து அவை நுகருமாறும் அருளுவன் அமலன் றானே (புடைநூல்)
6. அறிதருஞ்சிவனே எல்லாம் அறிந்து அறிவித்து நிற்பன் (வழிநூல்)

இங்கு, அவ்வழி நூலின்கண் ஆசிரியர் மாதவச் சிவ ஞான மாமுனிவர் அருளிய உரையை யுணர்தல் இன்றி யமையாதது. அஃதாவது, "" தன்னையறிய மாட்டாத பொறி முதலியவற்றைத் தான் அறிந்து அறிவித்து உட னிற்கும் புருடன்; அதுபோலத் தன்னையறிய மாட்டாத அப்புருடனை அறிந்து அறிவித்து உடனிற்பது சிவம் " என்பதாம்.

' திரோதான சத்தியி னியல்பை உபசாரத்தாற் சிவன் மேல் ஏற்றிக் கூறியவாறு ' இது (பெத்தநிலை பற்றியதாத லின்) முத்தி நிலையிற் சிற்சத்தியே நேர் நின்றுணர்த்தும்.

வழிநூலிற் ' குறைவதிகங்கள் தத்தங் கன்மம் ' என் னும் பூருவ பக்கமும், ' தத்தங் கன்மத் தளவினுக் களிப்ப னுதி' என்னுஞ் சித்தாந்த முகமாகக் குறித்த பகுதியே இப் புடை நூலில், ' கன்மத் தொன்மை யறிந்தவை நுகரு மாறும் அருளுவன் அமலன் ருனே ' என்று தொகுத்துக் குறித்தவாரும்.

இத்திருவிருத்தங் காறும் உணர்த்த உணர்வதே உயி ரியல்பு. சுதந்தரமின்று என்பதுணர்த்தப்பட்டது. மேல், சிவஞானப் பேற்றிற் குரியது கரணங் கடந்த நெறி யென்றும் அதைத் தவத்திட்டமே கூட்டமென் றும்அதன் பயனீதென்றும் உணர்த்துகின்ருர். (தொடரும்)

---

6. கலைப்பகுதி

பழமையும் புதுமையும்

(கோவைகிழார்)

பண்டைக்காலத்தில் தமிழ்நாட்டில் ஆடலும் பாட லும் சிறந்த நிலையில் இருந்தன. அக் காலத்துக் கல்வித் திட்டத்திலே இயற்ற மிழுக்கு எத்தனை பங்கு இருந் ததோ அத்தனைச் சரிப்பங்கு ஆடலுக்கும் பாடலுக்கும் இருந்தது. இயல், இசை, நாடகம் என்று தமிழை முப் பிரிவுகளாகப் பிரித்து வழங்கின கொள்கையே இதனை

நிரூபிக்கும். சங்கத்தார் காலத்திற்கு அடுத்த ஐம்பெருங் காப்பியக் காலத்தில் இப் பிரிவினை மிகப் போற்றிவரப்பட்டது. சிலப்பதிகாரத்தில் கோவலனை மயக்கி ஆட்கொண்ட மாதவியின் ஆடல் பாடல் திறத்தைக் கூறவும் வேண்டுமா? துறவியான இளங்கோவடிகளும் ஆடல் ஆகிய நாட்டியத் துறையை வெகு சிறப்பாக ஆண்டிருக்கிறார். அவரது ஒப்பற்ற நூலுக்கு உரைகண்ட அடியார்க்குநல்லாரும் அத் துறையின் பல வேறு பகுதிகளையும் இலக்கணங்களையும் மிக விரிவாகக் கூறுகிறார். ஆகவே அக்காலத்தில் நாட்டியக்கலை தமிழ் நாட்டில் மிகச் சிறந்ததென்பது திண்ணம். ஆனால் அத்தன்மைய கலையும் அக் கலைகள் கூறும் நூல்களும் பிற்காலத்தில் மறைந்துபோயின. நாளாவட்டத்தில் அக் கலையைப் போற்றுவாரே இல்லாமல் போய்விட்டனர்.

ஆனால் சோழர் சாம்ராஜ்யத்தில் அந்த நாட்டியக் கலை சிறப்புற்றிருக்கவேண்டும். ஏனெனில் சோழர்கள் உண்டு பண்ணிய பெருங் கோயில்களில் நாட்டிய உருவங்கள் மிளிர்ந்து கிடக்கின்றன. அவர்கள் மிகச் சிறப்பாகத் தேர்ந்துவைத்த நடன ராஜராகிய கூத்தாடு தேவருடைய திரு உருவம் இக் காலத்தில் மேற்கு நாட்டாரும் மெச்சத் தகும் நிலையில் உண்டாக்கப் பட்டது. மற்ற நடன நிலைகளைச் சிதம்பரக் கோபுரத்திலும் விருத்தாசலக் கோபுரத்திலும் காணலாம். கல்லில் சமைத்த கலை வல்லார்கள் நேரில் ஆடிக் காட்டியிருக்கிறார்களா? அக்கால நடனக் கலை உயர்வாகத்தான் போற்றப்பட்டது.

ஆனால் நாட்டில் தனி அரசு மறைந்தது. கலைகளும் மறைந்தன. உயிர்க் கலைகள் போய்ப் போலிக் கலைகளும் பிறநாட்டுக் கலைகளும் புகுந்தன. கலையோடு நூல்களும் அழிந்தன. மக்களும் நாட்டியம் என்றால் வெறுக்கத் தொடங்கினர். பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் நடன கலை அடியோடு போய்விட்டது என்று எண்ணும் நிலைக்கு வந்துவிட்டது. ஆடல் என்றால் கோயிலானாலும் சிற்றின்பச் சார்பானது என்று கூறி அதனைப் பொது மக்கள் வெறுத்தார்கள்.

இப்பொழுது பாருங்கள். நாட்டியக் கலையிலும் மறுமலர்ச்சி தோன்றியிருக்கிறது. இதுவரை இசை வேளாளர்கள்தான் நாட்டியக்கலை பயின்று அதனைக் காட்டி

வந்தார்கள். இப்பொழுதோ உயர்ந்த வகுப்பார்களும் நாட்டியக்கலை பயிலுகிறார்கள். தங்கள் சிறு குழந்தைகளுக்கும் பழகித் தருகிறார்கள். நாட்டியக் கலையில் வைத்திருந்த இழிவு மெல்ல மெல்ல போய்விட்டது.

பரத நாட்டியம் மட்டுமல்ல, குறத்தி ஆடல், கும்மிக் கோலாட்டம், ஒயிற் கும்மி, பள்ளுக் குரவை முதலிய நாட்டு மக்களின் ஆடலிலும் இப்போது கலை காணப்படுகின்றது. இந்த நாட்டுக் கூத்தாடல்களை வேடிக்கையாக நடத்துவது மட்டும் அன்றி பள்ளிக்கூடங்களிலும் பயிலப் படுகின்றது. நாடக மேடையிலும் திரைப் படங்களிலும் மிகுதியாகப் போற்றப் படுகின்றன. ஆகவே முன் இருந்த பழக்க வழக்கம் நடுவில் மறைந்துபோய் இப்போது மீண்டும் வெகு உணர்ச்சியுடன் உயிர்ப்பிக்கப் படுகின்றது.

கலை உணர்ச்சி என்பதற்கு மட்டும் அல்ல, இன்பந் துய்ப்பதற்குமட்டு மல்ல, அக் கலையில் உயர்ந்த பண்பாடும் தத்துவமும் இப்போது காணப் படுகிறது. நடராசதத்துவத்தை விளக்குபவர்கள் தமிழர் மட்டும் அல்ல, மேல் நாட்டுக் கவிகளும் அறிஞர்களும் அதில் சேர்வர். விஞ்ஞானிகளும் சேருகிறார்கள் என்றால் அதன் பெருமை சொல்லவும் கூடுமோ? ஆடுதல் அல்லது அசைவு இயற்கை, உயிர் உள்ளதன் குறி; நிற்றல் அல்லது அசைவின்மை, இயற்கைக்குப் பகை, இறந்ததன் குறி; இறைவன் அல்லது இயற்கை நடனத்தினால் பிரபஞ்சத்தை ஆட்டுகிறார், எல்லா உயிர்களும் உயிர் பெறுகின்றன. "ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே" என்றார் நாயன்மாரும். ஆகவே நடனக் கலையில் உலகத் தோற்றமே அடங்கியுள்ளது. இந்த உண்மையை மேற்கு நாட்டார் அறிந்துகொண்டார்கள். நம் பண்டைய முன்னோர்கள் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இதனை அறிந்து தங்கள் நாடோறும் நடத்தும் உல்லாசவிழாக்களிலும் திருக்கோயில் விழாக்களிலும் ஆண்டு கொண்டிருந்தார்கள். ஆகவே பழைய பழக்கத்தில் புதிய ஏற்பாடு இப்போது கணிக்கப்படுகின்றது அல்லவா?

நாட்டியத்தில் எவ்வாறு பழைய பழக்கத்தில் புது தத்துவம் காணப்படுகின்றதோ, அதுபோலவே தமிழ் நாட்டில் வழங்கும் பல பழக்க வழக்கங்களிலும் காணலாகும்.

உணவிலும் ஆடையணிகளிலும் இந்தத் தத்துவம் மிகத் தெளிவாகக் காணப்படுகின்றது. மற்றப் பழக்கங்களை யும் சிறிது ஊன்றிப் பார்த்தால் இதனைக் காணமுடியும். மனிதனுடைய வாழ்க்கை பிறந்ததிலிருந்து அவன் இறக்கும் மட்டும் நடைபெறுகிறது. இதனிடையில் அவன் பலவித அனுபவங்களைப் பெறுகிறுன். அவனுடைய வாழ்க்கை முன்னேர் கொண்ட வாழ்க்கை இயல்புகளிலிருந்தும் மிகுதியாக வேறுபடுவதில்லை. முன்னேர்கள் தங்கள் அனு பவங்களினுல் பல கருத்துக்களையும் செய்கைகளையும் ஆட் கொண்டிருக்கிருர்கள். அவைகளே பழக்க வழக்கங் களுக்கு அடிப்படையான ஆதாரங்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில் பிறக்கிற ஒருவன் எளிதில் அவைகளை விட்டு நீங்க முடியாது. அவைகளில் சிலவற்றையேனும் கைக் கொண்டே இருப்பான். வேறு நாட்டுக் கலாச்சாரங் களைக் கண்டு மயங்கி அவைகளை ஏற்றுக்கொண்ட ஒரு வனும் தன்னுட்டுக் கலாச்சாரங்களை அடியோடு நீக்க முடி யாது. இதற்குப் பல உதாரணங்கள் நமது நாட்டிலே கண் கூடாகக் காண்கிருேம். ஆகவே பழக்க வழக்கங்கள் மிக வும் உறுதிப்பாடுடையவைகள் என்க.

மனிதனுடைய வாழ்வு பிறப்பிலிருந்து தொடங்கு கிறது. உண்மையில் பிறப்பதற்குப் பத்து மாதங்களுக்கு முந்தியிருந்தே தொடங்குகிறது என்று கூறவேண்டியது. அதனைச் சொத்துரிமை குறித்தமட்டில் இந்துதர்ம நூலும் சட்டமும் ஒத்துக்கொள்ளுகிறது. குழந்தை கருப்பத்தில் இருக்கும்போதே சீமந்தம் முதலிய சடங்குகள் ஏற்பட் டிருக்கின்றன. இவைகள் வீண் என்று இக்கால மக்கள் கருதுகிருர்கள். இச் சடங்குகளைக் காட்டிலும் டாக்ட ருக்குக் காட்டுவது நல்லது என்பார்கள். தாய் அனுசரிக்க வேண்டிய விதிகள் இந்தச் சடங்குகளில் உண்டு. அவை களை அனுசரியாதவர்கள் எத்தனை வைத்திய சாலைகளுக் குச் சென்றுலும் பயனில்லை. வயிறு இறங்கிப்போதல் முதலியன ஏற்படாமல் இருக்கவேண்டும். நமது பழைய முறைகளில் இவைகளுக்குத் தகுந்த பாதுகாப்பு உண்டு.

குழந்தை பிறந்ததும் சில நாள் தீண்டல் ஏற்படுகிறது என்ற வழக்கம் உண்டு. தீண்டலின் உண்மைப் பொருள் அறியாது நாம் அதனை வெறுக்கிருேம். நோய் உள்ளவர்

கள் முதலியோர்கள் அணுகிக் குழவியின் வாழ்வைக் கெடுக்காமல் இருப்பதற்காகத்தான் இவ்விதக் கொள்கை களை வைத்திருக்கிறார்கள். குழந்தைக்குப் பெயரிடுவதிலும் கோயிலுக்குக் குழந்தையை எடுத்துச் சென்று மயிர் களைவதி லும் பொருள் உண்டு. தாழ்ந்த வகுப்பார்களில் மயிர் களைதலால் மிகுந்த ஆரோக்கிய பலன் உண்டு. பெயரிடும் போது பொதுவாகக் கடவுட் பெயர்களும் சமயப் பெயர் களுமே வைக்கிறோம். இது உலகில் எல்லா இடங்களிலும் உண்டு. மேல்நாட்டார்கள் இயற் பெயர்களைச் சுருக்கி விட்டு வீட்டுப் பெயர்களை முன்னால் நிறுத்துகிறார்கள். தென் நாட்டாராகிய நாமோ வீட்டுப் பெயர்களை விட்டு விட்டு இயற் பெயர்களை வெளிப்படையாகக் கூறுகிறோம். இதனால் மிகுந்த சமயப்பற்றுள்ளவர்களாகத் தோன்று கிறோம். ஒருவனை அழைக்கும்போது கடவுட் பெயரால் அழைப்பதினாலேயே கடவுளை நினைக்கிறோம் என்று இக் காலத்தில் சிலர் சாக்குச் சொல்வதுண்டு. ஆளின் பெயர் கள் மாத்திரமா? ஊர்ப் பெயர்களும் ஒரு காரணத்தைக் கொண்டுதான் வைக்கப்படுகின்றன. உலகம் முழுவதிலும் ஊர்ப் பெயர்களை எடுத்துக் கொண்டு அதன் சரிதத்தை ஆராயத் தொடங்குவது உண்டு. உதாரணமாகக் கோயம் புத்தூர் என்பது கோவன்புத்தூர் என்பதன் திரிபு என்ப தும் கோவன் என்ற தலைவனுடைய பெயரால் கட்டப்பட்ட புது ஊர் என்றும் அதன் ஆராய்ச்சி கூறுகிறது. இவ் வாறு ஊர்ப் பெயர்களின் உண்மை அடிப்படையை ஆராய்ந்துப் பழைய முறையைத் தழுவவேண்டும் என்று இப்போதைய மக்கள் கருத்து. திருச்சினாப்பள்ளி இன்று திருச்சிராப்பள்ளி ஆனதும் இதே தத்துவம்தான், இந்த முறை தமிழ்நாடு மட்டுமல்ல. தன்னுரிமை பெற்ற ஒவ் வொரு நாட்டிலும் ஏற்படும் ஒரு இயக்கம் ஆகும்.

குழந்தை பிறந்ததும், கிடத்தல், இருத்தல், தவழ்தல், நிற்றல், பயிலல், வளர்தல் முதலிய செயல்களில் ஈடுபடும். இதனை வரந்தருவார் வெகு அழகாகத் தமிழ் இளங்கன் னிக்கு வகுத்துப் பாடியிருக்கிறார். அதனைப் "பொருப்பிலே பிறந்து" என்ற பாடலில் காண்க. இனி, பின்வந்த புலவர் கள் அதனையே பிள்ளைத்தமிழாக வகுத்து மிகுந்த கற்பனை களோடு பத்துப் பருவங்களாகப் பாடினார்கள். இதனை

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் என்ற முறையில் விட்டு விடுகிறோமே ஒழிய அப்பருவங்களின் தத்துவங்களை நாம் ஆராய்வதில்லை. இப்போது தமிழ் படிக்கும் ஆர்வம் உண்டாக உண்டாக இந்தப் பருவங்களின் பொருளை ஆராய்ந்து அனுபவிக்க முயலுகிறோம். வருகைப் பருவம் அம்புலிப் பருவம் முதலியவைகளை நம் குழந்தைகளின் மழலைச் சொற்களைக்கொண்டு நாம் அனுபவிப்பதில்லையா? பாரதியார் அருளிச் செய்த பிறகு பாப்பாப் பாட்டும், வெண்ணிலாப் பாட்டும் நம்மை இக் காலத்தில் உருக்குகிறதைப்போல் சில ஆண்டுகளுக்கு முன்னர் உருக்கினது உண்டா? இதுவே பழைமையில் புதுமை காண்பது அல்லவா!

இனி, குழந்தை, பிள்ளைப் பருவமும் வாலிபப் பருவமும் முறையே அடைகிறான். அப்போது அவனுக்குப் படிப்பு தரப்படுகிறது. படிப்பு இருவிதமாக இருந்தது. வெறும் நெடுங் கணக்காகிய இலக்கியப் படிப்பும் பிழைப்புப் படிப்பாகிய தொழிற் படிப்பும் ஆசிரியனாலும் தந்தையாலும் முறையே தரப்பட்டன. இது பண்டைக் காலத்து முறை. ஆனால் சமீபகாலத்தில் இம் முறை வெறுக்கப்பட்டது. இருவிதப் படிப்பும் பள்ளிக்கூடங்களில்தான் கற்பிக்கப்படல் வேண்டும் என்பது ஆங்கிலர் கொள்கை. முதலில் வெறும் படிப்பே சிறப்பாகக்கொள்ளப் பட்டது. பிறகுதான் தொழிற்படிப்புச் சாலைகள் ஏற்படுத்தப்பட்டன. சமீபத்தில் நமது கவர்னர் ஜெனரல் பேசிய பேச்சில் இதைக் குறித்திருக்கிறதை நினைவுக்குக் கொண்டுவரலாம். குழந்தைகளுக்குப் பெற்றோர்கள் தங்கள் தலைமுறைத் தொழிலைக் கற்பிப்பதே சரியான முறை என்று வற்புறுத்தின பொருள் என்ன? பழைமையில் புதுமை இங்கே உண்டு அல்லவா?

மேலும் நாட்டுப் புறங்களில் நடைபெறும் விளையாடல்களைப் பாருங்கள். முற்காலத்தில் ஒவ்வொரு வாலிபனும் தன் உடலைத் தேர்ச்சி செய்வதற்காகப் பலவித விளையாடல்களைச் செய்துவந்தான். அவைகளில் கிளியாட்டம், கொம்பேறி, பல் சிக்கு, ஏறுதழுவல் முதலியன நாட்டுப்புற விளையாடல்கள். கோலடித்தல், கத்தி வீசுதல், குத்துச் சண்டை முதலியன போர்விளையாடல்கள்.

இவ்வித விளையாடல்கள் நாட்டின் பாதுகாப்பிற்காக ஏற்பட்டவை. இவை நிறுத்தப்பட்டன. தற்கால உடற்பயிற்சி, சாரண இயக்கம் முதலியன வந்தன. இப்போது கிராம சபைகள் ஏற்படுத்தப்படுகின்றன. அவைகளின் மூலம் பழைய ஆடல்களைக் கும்மி, கோலாட்டங்களுடன் ஆதரிக்கப்படுகின்றன. பழைய முறைகளில் தத்துவார்த்தமும் பார்க்கப்படுகின்றன. ஆசனங்கள் சூரிய நமஸ்காரம் மீண்டும் ஏற்படுவதற்கு இம் மறு மலர்ச்சியே காரணம்.

வாலிபன் வயது வந்ததும் இல்லற வாழ்வில் புக விரும்புகிறான். பண்டைத் தமிழரில் காதல் துறையும் பிறகு விரும்பின பெண்ணை மணந்து இல்லறம் புகுவதும் தமிழர் கொள்கைகள். இதையே களவியல் கற்பியல் என்று இலக்கணங்களில் கூறப்பட்டன. ஆனால் வெளி நாட்டு உறுத்தல்கள் நாட்டில் புகுந்து அச்ச நிலை உண்டாக்கவே, காதல் இயக்கம் தொலைந்தது. பெற்றோர் திருமணம் ஏற்படுத்துதல் தோன்றியது. இப்போது மீண்டும் தன்னுரிமை வரவே பல இடங்களில் காதல் மணங்கள் தோன்றுகின்றன. மக்களும் அவைகளை வெறுப்பதில்லை.

இல்லறம் புகுந்த மக்களிடைப் பல பழக்க வழக்கங்கள் தோன்றியிருக்கின்றன. வாணிபம், கைத்தொழில், அலுவல், சமயம், அரசியல் முதலிய எந்தத் துறை எடுத்தாலும் இல்லறத்தான் ஈடுபாடு அவைகளில் மிக உண்டு. அவைகளில் பண்டைய நாள் முதற்கொண்டு வழிவந்த பழக்கங்கள் எத்தனை வெறுத்தாலும் போவதில்லை. தற்போது மறுமலர்ச்சி தொடங்கிய பிறகு அப்பழக்கங்கள் பொருள் அற்றவைகள் அல்லவென்றும் அவற்றிலும் தத்துவங்கள் நிறைந்துள்ளன என்றும் இப்போது உணரப்படுகின்றன. உதாரணமாக வாழையடி வாழையென வந்த தொழில் முறைகள் புதிதாகக் கற்ற தொழிலைக் காட்டிலும் சிறந்ததென அனுபவத்தால் அறியக் கூடும். சமயத்துறையில் எவை எவைகளை மூட நம்பிக்கை என்று எண்ணினோமோ அவைகளுக்குப் பொருள் உண்டு என இப்போது கொள்ளப்படுகிறது. கோயில் நிர்மாணத்தின் பொருள் அறியார், இப்போது அறியத்தொடங்குகின்றனர். கோயில் உடலின் அமைப்பையே ஒத்திருக்

இறந்து என்ற அறிவு இப்போதுதான் உணரப்படுகின்றன. இவர்கள் பழமையில் புதுமை அன்ரே.

உடல் வலிமை உள்ள காலம் முழுதும் குடும்ப வாழ்வில் உழைத்த ஒருவன் முதிய வயது வந்தவுடன் ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டியது முறைமை. அவ்வாறு இல்லறத்திலிருந்து தவநிலைக்குப் படித்த பொதுமக்களே அன்றி மன்னர்களும் சென்றதாக வரலாறுகள் உண்டு. தமிழ் நாட்டில் அது தவநிலை என்று கூறப்பட்டது. வடநாட்டில் அதுவே வானப்பிரத்தம் அல்லது ஆசிரமவாசம் என்னப்பட்டது. இந்த நிலை பொதுவாக ஒருவனுடைய அறுபதாவது ஆண்டில் கொள்ளப்பட்டது. தற்காலத்தில் மேற்கு நாடுகளில் இவ்வித ஓய்வு உண்டு. இங்கேயும் அரசியல் அலுவல்களில் உண்டு. ஆனல் ஆங்கிலரால் நுழைக்கப்பட்ட வழக்கறிஞர் தொழிலில் இந்த ஓய்வு இல்லை. தமிழ் மக்கள் பழைய முறையை இதைப் பொருத்த மட்டில் தழுவவில்லை. சமீபத்தில் சாசன நிர்மாண சபையில் ஓய்வு காலத்தைப் பற்றித் தர்க்கிக்கையில் நீதிபதிகளின் ஓய்வைப்பற்றி விவாதித்தது நினைவுக்கு வரலாம். இதைக் கண்டால் முந்திய ஆசிரமவாசம் எல்லாருக்கும் நன்மையானது என்ற கொள்கை மீண்டும் எண்ணப்பட்டு வருகிறதல்லவா! அப்போதுதான் மேல் உலகிற்குத் தம்மைத் தயார்ப்படுத்திக்கொள்ளவும் சமயத்தில் ஈடுபடவும் கிடைக்கும் காலம் என்று அறியவேண்டும்.

மனிதன் வாழ்வு முடிந்ததும் இறக்கிருன். அவனுக்குப் பிற்கால வாழ்வு ஒன்று உண்டு என்பது ஆஸ்திகர்களுடைய நம்பிக்கை. அதற்கு ஏற்றபடி சமரக்கிரிகைகள் செய்கிருர்கள். புதைத்தல் சுடுதல் முதலிய பலவித வழக்கங்கள் உண்டு. தற்காலத்தில் நாஸ்திகம் பரவவே பிற்கால வாழ்க்கை இல்லை என்ற கொள்கை பரவிற்று. ஆனல் மேல் நாடுகளில் ஆன்மீக சங்கம் ஏற்பட்டுப் பலவித ஆராய்ச்சிகள் செய்தஅளவில் இறந்தவர்களுடன் பேசலாம் என்று நிரூபிக்கத் தொடங்குகிருர்கள். ஆகவே முற்கால நம்பிக்கை தற்போது மேற்கு நாட்டாராலும் ஆளப்படும் நாளும் வந்துகொண் டிருக்கிறது. பழைய கருத்துக்களுக்கு ஆராய்ச்சி முறையில் புதுநம்பிக்கை கற்பிக்கப் படுகிறதல்லவா? இதனை அனுசரித்துத்தான் ஈமக்கடன்கள்

செய்யப்பட்டன. இவைகளுக்கும் பொருள் உண்டென இப்பொழுது எடுத்துக் கூறப்படுகின்றது.

இதுவரை மனிதன் பிறந்தது முதல் இறக்கும் மட்டும் கொண்டிருந்த வாழ்க்கை முறையில் காணும் பழக்க வழக்கங்களுக்குத் தற்போதைய கருத்து மறுமலர்ச்சி எடுத்துக் கூறப்பட்டது. இனி சொத்துரிமை, மண நிகழ்ச்சி, ஊர் ஆட்சி, தலைவர்கள் தெரிந்தெடுத்தல், தீ மிதித்தல், சபதம் செய்தல், பச்சை குத்துதல், செடில் முதலிய தவநோன்புகள் முதலிய பல பழக்க வழக்கங்கள் நாட்டில் உண்டு. இவைகளிலும் என்ன பொருள் உண்டு என மக்கள் எண்ணுகிற காலம் வந்துவிட்டது. ஆகவே எதையும் தீர ஆராயாமல் தள்ளிவிடுவது சரியல்ல. பழமையில் புதுமை உண்டு என்று கொள்வதே சரி என்க.

——

7. ஆராய்ச்சிப் பகுதி

கோப்பெருஞ்சிங்கன் தில்லையுலா வந்தது

(K. S. வைத்தியநாதன்)

திருநாமநல்லூர்க் கருகாமையிலுள்ள சேந்தவன் மங்கலத்தைப் படைவீடாகச் செய்துகொண்டு பேரரண்களின் நடுவே தலைநகரை அமைத்து, ஏழிசைமோகன் அசலகுலோத்தமன் மணவாளப் பெருமாள் என்ற ராஜ ராஜ காடவராயர் பல்லவரின் தனி ஆட்சியை கி. பி. 1229-ல் நிறுவினான். இதற்கு விழுத்துணையாக நின்று, தந்தையின் நோக்கங்களை நிறைவேற்றப் பல கடும் போர்களில் போர் முனையின் முன்னணியில் வாள் வல்லவனாக விளங்கின வீரர் வீரன், மணவாளப் பெருமாளின் தவப்புதல்வன் அழகிய சீயன் கோப்பெருஞ் சிங்கனே. இவன் தக்க சமயங்களைக் கைவிடாது சோழமன்னனையும் அவ்வரசனது படைகளையும் பலவிடத்து முறியடித்து வந்தான். ‘கத்ய கர்ணாமிருதம்’ என்ற வரலாற்றுக் காதை கூறுமாறு, பாண்டிய மன்னன் முதலாம்மாறவர்மன் சுந்தரபாண்டியன்,சோழனை

வென்று நாட்டையும் தனதாட்சிக்குட் படுத்தியபோது, நாடிழந்த சோழமன்னன் தன் உறவினனும் நண்பனுமான போசள வீரநரசிம்மன் துணையைப் பெறும் பொருட்டுக் குந்தள நாட்டை நோக்கிச் சென்றுகொண்டிருந்த தருணம், பல்லவன் கோப்பெருஞ் சிங்கன் திடீரென சேனையுடன் தோன்றித் தெள்ளாற்றில் சோழனையும் அவன் படையையும் வென்று, பொன்னி காவலனையும் அவன் பெண்டு பண்டாரங்களுடன் சேந்தவன்மங்கலத்தில் சிறையிட்டான். இதனைச் செவியுற்ற போசளன் வெகுண்டு தான் சோழ ராஜ்யஸ்தாபனு சார்யன் என்ற சிறப்புப் பெயரை மறுபடியும் நிலைநாட்டும்பொருட்டு, தண்டத் தலைவர்களுடன் சோழனைச் சிறைமீட்குமாறு புறப்பட்டனன். இடையே நின்று இடையூறு செய்த மகதை நாட்டு வாணகோவரையனை வென்று அவனையும் தேவிமாரையும் பண்டாரங்களுடன் சிறைகொண்டு, பின்னர் திருவரங்கத்தின் அருகே உள்ள பாச்சூரில் தங்கினன். அங்கிருந்து போசள மன்னன்தான் தெற்கே பாண்டியனுடன் போர்புரிய எத்தனித்துத் தன் தண்டத் தலைவர்களான ஜகதொப்பனையும், சமுத்ரகோபையனையும், கோப்பெருஞ்சிங்கனையும் முறியடித்து, சோழமன்னனைச் சிறையினின்றும் மீட்டுவரக் கட்டளை யிட்டனர். அவ்வாணை சிரமேற்கொண்டு போசள தண்டநாயகர்கள் சிதம்பரம் தாலுகாவிலுள்ள எள்ளேரி, கொல்லியூர் மூலையையும், அதற்கடுத்த தொழுதகையூர் முதலிய இடங்களை அழித்து, கோப்பெருஞ்சிங்கன் முதலிகளான வீரகங்க நாடாழ்வான், சீனத்தரையன், ஈழத்துப் பராக்கிரம பாகு முதலியோரைப் போரில் கொன்று, பின்னர் சிதம்பரத்தில் நடராசப்பெருமானை வணங்கிவிட்டுத் தொண்டமாநல்லூர் முதலிய ஊர்களை அழித்து, திருவதிகை, திருவக்கரை முதலிய தலங்களில் நாசங்களிழைத்து நாட்டிலுள்ளோரைப் பலவிதத்தும் துன்புறுத்தின பின்னர் சேந்தவன்மங்கலத்தின் மேல் படையெடுத்துச் செல்ல முயன்ற தருணத்தில் கோப்பெருஞ்சிங்கன் இனியும் தவணை செய்வதில் பயனில்லை என்று கண்டு, சோழனையும் தேவியரையும் சிறைக்கோட்டத்தினின்று விடுவித்தனன். விடுபட்ட சோழனை உறவினருடன் போசளவீரர்கள் சோழநாட்டிற்கு அழைத்துச்சென்றனர். சோழனைச் சிறைமீட்டபின், போசளன் பாண்டி-

யரை மகேந்திரமங்கல மென்னுமிடத்தில் ஒரு கடும் போரில் வென்று பாண்டிய னாட்சிக்குட்பட்டிருந்த சோழ நாட்டின் பகுதியை மீட்டிப் பாண்டியனிடம் திரையும் கொண்டான். ஆகவே, பல்லவன் கோப்பெருஞ்சிங்கனிடம் கைப்பற்றப்பட்ட சோணாட்டுப் பகுதியையும், பாண்டிய னிடமிருந்து மீட்கப்பட்ட பகுதியையும் ஒருங்கே சேர்த்து சிறைமீட்கப்பட்ட சோழனிடம் ஒப்படைத்தான் போசள வீரநரசிம்மன். இவை நிகழ்ந்தது கி. பி. 1231-ல் எனலாம்.

கரந்தையில் கண்ட ஒரு சிலாசாசனம், தெள்ளாற்றில் காடவனால், சோழன் வெல்லப்பட்டதையும் பின்பு சோழன் சிறைபுகுந்ததையும் கூறிவிட்டு அபயன் மகளைப் பல்லவர் கோன் மணந்தான் எனக்கூறுகின்றது. இதை நடந்தெய் திய செய்திகளுடன் ஒத்துநோக்குமிடத்துச் சிலர் கருதுவது போல் இக்காடவன் மணவாளப் பெருமாள் அல்லவென் றும், அவன் மகன் கோப்பெருஞ்சிங்கனே என்றும் நினைக் கக் காரணங்கள் மிகுதியாக உள்ளன.

மணவாளப் பெருமாள் பலகாலம் மூன்றாங்குலோத் துங்கனின் உயர்படைத் தலைவர்களுள் ஒருவனாக விளங்கி னான் என்பதாலும், குலோத்துங்கன் ஆட்சி முடியும்வரை சோழ சாம்ராஜ்யத்தினின்றும் மீளவில்லை என்பதாலும், கி. பி. 1191 முதல் இக்காடவன் குலோத்துங்கனது பல கல் வெட்டுகளிலும் தோன்றுவதாலும், குலோத்துங்கனுக்குப் பின்னர் அரசாண்ட மூன்றாம் ராஜராஜன் ஆட்சியில் கி. பி. 1228 ல் நடந்த தெள்ளாற்றுப் போரின் பின்னரே இத் திருமணம் நடந்ததாலும், சோழன்மகளை மணந்தது வயது முதிர்ந்துவிளங்கிய மணவாளப்பெருமான் அல்லவென்றும், அவனது இணையற்ற வீரப்புதல்வன் கோப்பெருஞ்சிங்கனே என்றும் தெளியக் கிடக்கின்றது. இவ்வீரனே சிதம்பரத் தையும் அதனருகாமையும் உள்ளிட்ட பெருநிலப்பரப்பின் அதிபதியாக மணவாளப்பெருமாள் சேந்தவன்மங்கலத்தில் நின்று ஆட்சி புரியும்போது, தனது தகப்பனாருக்கு உதவி புரிந்துவந்தான் என்பது பல கல்வெட்டுகளினின்றும் போதரும். வயலூர் கல்வெட்டால் 'பொன்னி நாடனும் உரி மையும் அமைச்சரும்' தெள்ளாற்றிலே போரில் வெல்லப் பட்டுச் சிறைக்கோட்டம் புகுந்தது அறிவோம். திருவேந்தி புரக் கல்வெட்டாலும், கத்ய கர்ணாமிருதமென்னும் வர

லாற்று நூலாலும் சிறைபட்ட சோழன் மீட்கப்பட்டதனை அறிவோம். இவ்விரண்டு வரலாற்று ஆதாரங்களும் கூறுது விட்டதொன்றை, கரந்தைக் கல்வெட்டு பகர்ந்துளது. ஆகவே கரந்தைக் கல்வெட்டால் அறியப்படுவது என்னை யெனில் தெள்ளாற்றுப் போரின் பயனுகச் சோழன் வெல் லப்பட்டு, சிறையிடப்பட்டு, பின்னர் விடுவிக்கப்பட்டான் என்றும் உடனடியாகச் சோழன் தன்மகளை வீரனுை கோப்பெருஞ்சிங்கனுக்கு, சந்தோஷத்துடன் மணஞ்செய்து கொடுத்ததுமேயாம். 'செந்தமிழ் வாழப்பிறந்த காடவன்', தமிழ்மறை பாடவல்ல 'தேவாரமழிகியான்', நாட்டியக் கலையின் நிபுணத்துவமடைந்த 'பரதம் வல்லபெருமாள்' என்று பலவிதத்தும் சிறப்பெய்திய வீராதிவீரன் கோப் பெருஞ்சிங்கன், அபயன் மகளைத் தில்லையிலேயே மணஞ் செய்துகொண்டு, திருமணவிழா அங்கு நடத்தியது சாலப் பொருந்துவதொன்றும். இப்பெருமணத்தையும், அதன் சிறப்பையும், சாஸனக்கவி பின்வருமாறு பாடினுர். "சுந்த ரத்தோரண நாட்டித் துகிற்கொடி சூட்டி முத்துப், பந்தர் பாலிகைதீபம் பரப்புமின் பல்லவர்கோன், செந்தளிர்க் கை கோத் தபயன் மகளுடன் தில்லையுலா, வந்தளிக்கும் பெரு மாள் வெற்பமாதை மணஞ்செய்யவே"

(S. I. I. Vol xii Intro. p. x)

---

8. விரிவுரைப்பகுதி

சேக்கிழார் காலம்

(ம. ரா)

உலகத்தில் வளர்ச்சி பெற்ற ஒவ்வொரு மொழியிலும் இலக்கிய வரலாறு உண்டு. அவ்வரலாற்றில் அம்மொழி யின் வளர்ச்சி எவ்வாறு ஏற்றம் அடைந்திருக்கிறது என்று கூறப்பெறும். அவ்வாறு கூறுகையில், அம்மொழியில் தோன்றிய புலவர் பெருமக்களுடைய எண்ணப்போக்குகள் ஆராய்ச்சிவகையில் காலவரிசையாக எழுதப்பெற்றிருக்கும். அதற்காகப் புலவர்பெருமக்களுடைய காலங்களை வரிசை யாகத் தொகுத்து எழுதியிருப்பார்கள். ஆகவே இலக்கிய

வரலாற்றுக்குப் புலவர்களுடைய காலம் இன்றியமையாத சிறப்பு வாய்ந்தது. பெரும்பாலும் புலவர்பெருமக்களுடைய வரலாறுகளை எழுதும்போது எங்கெந்த காலத்தில் எங்கெந்த நூலை எழுதினர்கள் என்றும் குறிப்பது வழக்கம். முன்னமே காலம் குறிக்கப்படாத இடங்களில் காலவரையறையை ஆராய்ச்சி வகையில் நிர்ணயப்படுத்துவார்கள். இந்த வகையில் இலக்கியவரலாறு ஆராயப்படுகின்றது.

ஆங்கிலம் முதலிய மேல்நாட்டு மொழிகளில் புலவர்களுடைய காலங்கள் நிச்சயமாகத் தெரிந்துவைத்தவர்கள் புலவர்களேயன்றிப் புலவர்களுடைய வாழ்க்கையைப்பற்றி எழுதின ஆசிரியர்களும் காலத்தைக் குறித்து அதை முன்னிட்டே ஆராய்ச்சி உரைகளை எழுதியுள்ளார்கள். காலவரையறையே மேல் நாட்டாருக்கு ஒரு சிறந்த கொள்கையாகும். ஆங்கில இலக்கிய வரலாற்றில் சென்ற ஆயிரத்து இருநூறு ஆண்டுகளாக வாழ்ந்த புலவர்களின் காலவரையறை குறிப்பாக எழுதப்பட்டுள்ளது. எங்கெந்த ஆசிரியன் எங்கெந்த ஆண்டில் எங்கெந்த நூலை இயற்றினன் என்றெல்லாம் குறிக்கப்பட்டுள்ளது. இந்தத் தன்மையே மேல்நாட்டு மொழிகளுக்கு பெருமை தருகின்றது.

இந்தச் செய்தியைப் பாரத நாட்டிற்கு ஒத்திட்டுப் பார்க்கலாம். வடமொழி இலக்கியம் பழமையானதும், விரிவானதுமாக இருக்கின்றது. அதனை மேல்நாட்டாரும் புகழ்கிருர்கள். ஆனல் எந்தப் புலவன் எந்தக் காலத்தில் இருந்தான் என்று நிச்சயமாகச் சொல்லப்படவில்லை. தற்கால ஆராய்ச்சி வகையில் காலங்கள் குறிக்கப்படுகின்றன. அவைகளிலும் கருத்து மாறுபாடுகள் மிக உண்டு. எடுத்துக்காட்டாக வடமொழியில் மிகச் சிறந்த கவியாகிய காளிதாசனுடைய காலம் இன்னும் செவ்வையாக நிர்ணயிக்கப்படவில்லை. சிலபேர் விக்கிரம சகாப்தம் ஏற்பட்ட காலத்தில் என்பர். அதாவது கி.மு. 56. மற்றும் சிலபேர் போஜராஜன் காலமென்பர். அதாவது கி.பி. 12-ம் நூற்ருண்டு. எத்தனை பேதம்! தற்காலத்து ஆராய்ச்சியாளர்கள் குப்தர் காலத்துக்குக் கொண்டு செல்லுகிருர்கள். அதாவது கி. பி. 5 - ம் நூற்ருண்டு. இப்படியிருக்க எந்த ஆண்டில் எந்த நூலைக் காளிதாசன் எழுதினனென்று கூறமுடியுமா? வடமொழிக்கே இவ்விதமான குறைபாடு இருக்கையில் ஏனைய

பாரதநாட்டு மொழிகளைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமா? இந்த வகையில் இந்தியநாட்டு மொழி வரலாறுகள் குறைபாடு உடையனவாக இருக்கின்றன.

இனித் தமிழ்மொழியைப்பற்றி ஒரு சிறிது கவனிப்போம். தமிழ்மொழி மிகச் சிறப்புடையது. அதில் ஆராய்ந்த இலக்கியங்கள் மிகச் சிறந்தன என்று நாடோறும் பெருமையுடன் பேசிக்கொள்கின்றோம். அது உண்மைதான். ஆனால் காலவரை என்பதைக் குறிப்பிட்டோமாகில் அங்குதான் குறைபாடு தோன்றுகிறது. சிறந்த புலவர்களுடைய காலம் இன்னது என்று உறுதியாகக் கூறமுடிகிறதா? காலத்தைப்பற்றிக் கூறும் குறிப்புக்கள் மிகக் குறைவு. காலத்தை ஒரு முக்கியமான கொள்கையென்று முன்னோர்கள் நினைக்கவில்லைபோலும்! சிறப்புப்பாயிரங்களில் சில நூல்களில் ஆக்கியோன் பெயரோ, ஆக்கிய ஆண்டும் எழுதப்பட்டுள்ளது. மற்றும் சில நூல்களைப் பற்றி கல்வெட்டு ஆதாரமுண்டு. இவைகளெல்லாம் பிற்காலத்தவைகளே. பண்டைக்காலத்துப் புலவர்களைப் பற்றி இவ்வித விவரங்களும் இல்லை. சங்ககாலம் இன்னதென்று நிச்சயமாகக் கூறமுடியுமா? முதல் இடைச்சங்கங்களைப் பற்றி ஒரு சிறிதும் அறியோம். உலகப் புகழ்பெற்ற உத்தமப் புலவர் திருவள்ளுவரைப்பற்றி எத்தனை கருத்துவேற்றுமை. நாள்தோறும் புதுப்புது காலவரைகள் அவர்மேல் ஏற்றுகிறார்கள். ஐம்பெருங் காப்பியங்களைப் பற்றியும் ஐஞ்சிறு காவியங்களைப் பற்றியும் இதே நிலைதான். கவிச் சக்ரவர்த்தியாகிய கம்பருடைய காலம் எது? ஓர் ஐயங்கார் எட்டாவது நூற்றாண்டென்பர். மற்றொருவர் பதின்மூன்றாம் நூற்றாண்டென்பர். ஏன் இந்தக் கருத்து வேற்றுமை? மாணிக்கவாசகரைப் பற்றி வியக்கத்தக்க வேற்றுமைகள் உண்டு. முதல் நூற்றாண்டு முதல், பத்தாம் நூற்றாண்டு வரை ஆயிரம் ஆண்டளவில் இழுத்தடிப்பர். அப்படியாயின் மிகப் புகழ்பெற்ற சேக்கிழார் காலத்தைப் பற்றி வரையறுத்து ஒரு முடிவுகாண முடியுமா என்று ஏங்குவர்.

தென்னாட்டுத் தமிழ் இலக்கிய வரலாற்றில் வைணவ புலவர்களைப் பற்றிக் காலவரையறை ஒருவாறு வகுத்துள்ளார்கள். ஆனால் சைவப்புலவர்களைப் பற்றி மட்டும் பல

புலவர்களின் காலவரையறைகள் இன்னும் சரியாக நிச்சயிக்கப்படவில்லை. சேக்கிழார்பெருமானைப்பற்றி நாளது வரை பல அறிஞர்கள் ஆராய்ச்சிஉரைகள் எழுதியுள்ளார்கள். அவர்களில் வேற்றுமை மிகவும் உண்டு. இராஜராஜ சோழன் I காலம் முதல் குலோத்துங்கச் சோழன் III வரையில் ஒவ்வொரு அரசன் காலத்திலும் சேக்கிழார் பெருமான் இருந்தார் என்று வெவ்வேருகக் கூறுவர். ஆனால் ஒன்றுமட்டும் உறுதி. விஜயாலயச் சோழன் வம்சத்தார் அதாவது பிற்காலச்சோழர்கள் ஆண்டபோது அவர் வாழ்ந்தார் என்பதை எல்லாரும் ஒத்துக்கொள்ளுகிருர்கள். சேக்கிழார் காலத்தைப் பற்றிய விரிவுரைகளை அரசாங்கக் கல்வெட்டு அலுவல் அறிக்கைகள், செந்தமிழ்ச்செல்விக் கட்டுரைகள், சிவக்கவிமணி எழுதிய "சேக்கிழார்" என்ற நூல், டாக்டர்-இராஜமாணிக்கம் பிள்ளை எழுதின "பெரிய புராண ஆராய்ச்சி" முதலான நூல்களில் காணலாம். அண்மையிலே அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தார்கள் திரு. சதாசிவ பண்டாரத்தார் எழுதிய "பிற்காலச் சோழர் வரலாறு" என்ற நூலைப் பதிப்பித்திருக்கிருர்கள். அதில் இரண்டாம் தொகுதியில் இரண்டு இடங்களில் சேக்கிழார் காலத்தைப் பற்றிக் குறிக்கப்பட்டுள்ளது: அதில் 101-ம் பக்கத்தில் சேக்கிழார் 2-ம் குலோத்துங்கச் சோழன் காலத்தவர் அல்ல என்றும் 166-வது பக்கத்தில் 3-ம் குலோத்துங்கச் சோழன் காலத்தவர் என்றும் கூறுகிருர். அந்நூலில் தம் கொள்கைக்குச் சில காரணங்களையும் எழுதியிருக்கிருர். அக்காரணங்களை ஆராயவேண்டியது அவசியமல்லவா?

இதுவரையில் பல அறிஞர்கள் சேக்கிழார் பெருமான் குலோத்துங்கன் II காலத்தவன் என்று முடிவுகட்டியிருந்தார்கள். அவர்களில் சிறப்பாகக் கல்வெட்டுத்துறை ஆராய்ச்சியாளர்கள், செந்தமிழ்ச்செல்வி கட்டுரையாளர்கள், சிவக்கவிமணியவர்கள், ராஜமாணிக்கம் பிள்ளையவர்கள் அக்கொள்கையையே வற்புறுத்தியிருக்கிருர்கள். தற்போது அண்ணுமலைப் பல்கலைக் கழகத்து வெளியீட்டில் மாறுபட்ட கொள்கை வெளிவந்ததை முன்னிட்டுக் காலவரையறையை மீண்டும் ஆராய்ச்சி செய்யவேண்டிய அவசியம் வந்துவிட்டது. இதனைப்பற்றிச் சிறிது விவரமாகக் கூறுவோம்:

மேலே கூறிய நூலில் இரண்டாம் குலோத்துங்கனைப் பற்றிய பகுதியில் அடியில் கண்டவாறு அதன் ஆசிரியர் எழுதுகிறார் :

"இனி, நம் குலோத்துங்கன் காலத்தில்தான் புகழேந்திப் புலவர், சேக்கிழாரடிகள், கம்பர் ஆகிய புலவர் பெருமக்கள் இருந்தனர் என்று ஆராய்ச்சியாளருள் சிலர் எழுதியுள்ளனர். அன்னோர் கருத்து உறுதி பெறுதற்குத் தக்க சான்றுகள் இன்மையின் அதனை ஏற்றுக்கொள்ள இயலவில்லை. புகழேந்திப் புலவர் முதல் மாறவர்மன் குலசேகர பாண்டியன் ஆட்சிக்காலமாகிய கி. பி. 13-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், சேக்கிழாரடிகள் மூன்றாங் குலோத்துங்கச் சோழன் ஆட்சியின் முற்பகுதியிலும், கம்பர் உத்தம சோழன் ஆட்சிக் காலத்திலும் இருந்தவர்கள் என்பது ஆராய்ச்சியாற் புலப்படுகின்றது. ஆகவே, அப்புலவர் பெருமான்கள் மூவரும் வெவ்வேறு காலங்களில் நம் தமிழகத்தில் வாழ்ந்தோர் ஆவர்."

இதில் புகழேந்திப் புலவர், சேக்கிழார், கம்பர் என்ற முப்புலவர்களும் வெவ்வேறு காலத்தவர் என்கிறார். அது ஒருவேளை இருக்கலாம். ஆனால் சேக்கிழார் 3-ம் குலோத்துங்கனுடைய காலத்தவர் என்று கூறுவதற்கு அதில் ஆதாரம் காட்டவில்லை. மேலும் "சேக்கிழார் 2-ம் குலோத்துங்கன் காலத்தவர் என்ற கருத்து உறுதி பெறுவதற்குத் தக்க சான்றுகள் இன்மையின் அதனை ஏற்றுக்கொள்ள இயலவில்லை" என்கிறார். அக்கருத்திற்குப் பிற ஆராய்ச்சியாளர் கூறும் சான்றுகளை எடுத்துச் சொல்லி அவைகளை ஏன் ஏற்றுக்கொள்ள இயலாது என்று காரணம் காட்டியிருந்தால் இவருடைய உறுதி நன்றாக இருக்கும். ஆனால் அவ்வாறு அவ்வாசிரியர் ஒன்றும் கூறவில்லை.

இனி 3-ம் குலோத்துங்கன் வரலாற்றைக் கூறும் பகுதியில் "புலவர் பெருமக்கள்" என்ற உட்பகுதியில் சேக்கிழார் பெருமானைச் சேர்த்தி அவரைப் பற்றி இரண்டு பக்கங்கள் எழுதியிருக்கிறார். அதில் 3-ஆம் குலோத்துங்கன் சைவத்திற்கும், தமிழுக்கும் நிகழ்த்திய பெருந்தொண்டானது அருண்மொழித் தேவராகிய சேக்கிழார் அடிகளைக் கொண்டு திருத்தொண்டர் புராணத்தைப் பாடுவித்தமையையே யாமென்கிறார். சேக்கிழார் அடிகள் குலோத்துங்க

னுக்கு அமைச்சரா யிருந்தும் சிவபக்தியும், புலமைத் திறத்தையும் கண்ட அரசன் அவரைப் பெரிய புராணம் பாடும்படிக் கேட்க, தில்லை நகரில் அப்புராணத்தைப் பாடி வேந்தனது அவைக்களத்தில் அதனை அரங்கேற்றினர் என்கிறார். அரசன் 2ஆம் குலோத்துங்கன் அல்ல 3-ம் குலோத்துங்கன் என்று சொல்லி, ஒன்றிரண்டு காரணங்கள் கூறுகின்றார். 2-ம் குலோத்துங்கனுக்கு ஆசிரியனாகவும், 2-ஆம் ராஜராஜன் காலத்திலும் வாழ்ந்து உலா, பரணி, பிள்ளைத்தமிழ் என்பவைகளைப் பாடிய ஒட்டக்கூத்தர், சிவபக்தியில் திகழ்ந்தவரானதினால் அவர் காலத்தில் திருத்தொண்டர் புராணம் பாடப்பட்டிருந்தால் அச்செய்தியை ஒட்டக்கூத்தர் குறித்திருக்க மாட்டாரா என்று கேட்கிறார். மேலும் அடிக்குறிப்பில் ஒட்டக்கூத்தர் தக்கயாகப்பரணியில் கூறியுள்ள சம்பந்தர் வரலாற்றிற்கும், சேக்கிழார் கூறும் வரலாற்றிற்கும் சிலவேறுபாடுகள் இருப்பதினால் அது ஒன்றே இருவரும் ஒரே காலத்தினர் அல்லர் என்று உணர்த்துகிறார். இந்தக் காரணங்கள் எந்த வகையில் உறுதியானவை என்று கூற முடியுமா? இரண்டு புலவர்கள் ஒரே காலத்தில் இருந்தால் ஒருவரை ஒருவர் குறிப்பிட வேண்டுமென்ற நியாயமில்லை. குறிப்பிடவில்லை என்ற எதிர் மறையால் காட்டுங் காரணம் வலிமை உடையதல்ல. மேலும் ஒரே வரலாற்றைப் பற்றி ஒரு காலத்தில் இருக்கும் இரண்டு புலவர்கள் ஒரேவிதமாக எழுதவேண்டுமென்றநியாயமுமில்லை. அவரவர்கள் அறிவிற்கும் சிந்தனைக்கும் ஏற்றவாறு வெவ்வேறு விதங்களாக எழுதுவதில்லையா? ஆகவே இவ்வாசிரியருடைய காலக்கூற்றை ஏற்றுக் கொள்ளுவது கடினம்.

மேலும் சேக்கிழாரடிகள் தன் நூலில் கூறியுள்ள பேரம்பலம் பொன் வேய்ந்த அனபாயன் 3 ஆம் குலோத்துங்கனே என்கிறார். அக்குலோத்துங்கன் எதிரம்பலம் பொன் வேய்ந்தான் என்று கல்வெட்டுகள் உணர்த்துகின்றன என்றும், எதிரம்பலமே பேரம்பலம் என்று வழங்கியதென்றும், ஆகையினால் குலோத்துங்கன் காலத்தில் சேக்கிழார் இருந்தார் என்றும் கூறுகின்றார். இங்கே எதிரம்பலம் என்பது பேரம்பலத்தின் ஒரு பெயர் என்று எந்தக் காரணங் கொண்டு ஆசிரியர் கூறுகின்றார் என்பது விளங்கவில்லை.

2-ஆம் குலோத்துங்கன் பேரம்பலம் பொன் வேய்ந்தான் என்று இவ்வாசிரியரே 93-ஆம் பக்கத்தில் "தில்லைத் திருப்பணி" என்ற உட்பகுதியில் கூறுகின்றார். மற்றும் 3-ஆம் குலோத்துங்கன் எதிரம்பலம் வேய்ந்தான் என்று கல்வெட்டுகள் கூறுகிறதாக 168-வது பக்கத்தில் இவ்வாசிரியரே கூறுகின்றார். சாதாரண அறிவு பெற்ற எவனும் எதிரம்பலமும், பேரம்பலமும் வெவ்வேறு என்று உணரத் தொடங்குவான். இரண்டு அரசர்களில் ஒருவன் பேரம்பலமும், மற்றொருவன் எதிரம்பலமும் பொன் வேய்ந்தார்கள் என்று குறித்திருந்தால்இருஅம்பலங்களும் வெவ்வேறு என்று அறியவேண்டாமா? இல்லாவிடில் ஒரே பெயர் ஏன் குறிக்கப்படவில்லை? சேக்கிழார் அடிகள் தன்னை ஆதரித்த அரசனை, "திருப்பேரம்பலம் செய்ய தூய பொன் அணி சோழன்...சீரனபாயன்" அதில் தெள்ளத் தெளிவாகப் "பேரம்பலம் பொன்வேய்ந்த அனபாயன்" என்கிறார். கல்வெட்டுகளில் கூறுகிறார்போல "எதிரம்பலம் வேய்ந்தான்" என்று ஏன் குறிக்கவில்லையோ? ஆகவே, இயற்கையாக உள்ள சொற்களையே எடுத்துக்கொள்வது சரியானதல்லவா?

மேலும் ஆசிரியர் சேர்க்கை 2-ல் சோழ மன்னர்களைப் பற்றிய பழம் பாடல்கள் என்ற பகுதியில் 2-ஆம் குலோத்துங்கனைப் பற்றிய பாடல்களாக 87 முதல் 98 வரை சேர்த்திருக்கிறார். இவைகளில் 2-ம் குலோத்துங்கனைப்பற்றி அனபாயன் என்ற பேர் வருகின்றது. பிறகு 115-முதல் 124 வரை 3-ம் குலோத்துங்கனுடைய பாடல்கள் என சேர்த்திருக்கிறார். இவைகள் எல்லாம் பெரிய புராணப் பாடல்களே. இவைகளிலும் சோழனுடைய பெயர் அனபாயன் என்றே வருகின்றது. ஆகவே இவைகளை மட்டும் தனியாகப் பிரித்து எழுதுவதற்கு என்னகாரணமோ? அனபாயன் என்ற பெயர் 2-ம் குலோத்துங்கனுடையது என்றும், அவன் காலத்தில்தான் சேக்கிழார் நூல் இயற்றினார் என்றும் முந்திய ஆராய்ச்சியாளர் கூறிய கருத்துக்கு மாறுபாடாக "பிற்கால சோழர்" என்ற நூலின் ஆசிரியர் கூறுவதற்குத் தக்க காரணங்கள் இருக்கின்றனவா ஆராயுங்கள்.

---

9. ஒழிபு

சிவ சமய மாட்சி

(முருகவேள்)

பண்டு தொட்டே தமிழ்நாட்டிற் பல்லாயிரமாம் ஆண்டுகளா
நின்று நிலவி வழங்கிவரும் நிகரில் பழைய பெருஞ்சமயம்
இன்றை உலகில் அறிவியலார் இன்னும் காண்டற் கியலாத
ஒன்றை யல்ல உண்மைபல உரைக்கும்சிறந்த அருட்சமயம்.

உலகம் முழுதும் ஒருகாலத் துலவிப் பரந்து வழங்கிநின்றே
அலகில்பெருமைத்தமிழ்மொழிபோடறிவிற்சிறந்ததமிழர்தம்
கலைகள் குணங்கள் நாகரிகம் கருதும் மாட்சி முதலவெலாம்
நிலவச் செய்த பெருஞ்சீர்த்தி நெறியின் மிக்க நீள்சமயம். 2

மேலை நாட்டின் அறிஞருமே மிகவும் வியந்து பாராட்டும்
சால நல்ல பன்முடிபும் தருக்க நெறியில் அறிவியலும்
தோலத்தெருட்டி அறிவுறுக்கும்தொன்மைசான்றதமிழ்ச்சமயம்
ஏல மிகச்சீர் திருத்தத்திற் கிகலா தியைந்த இன்சமயம். 3

சிந்து வெளியின் நாகரிகம் சிறக்க விளக்கும் செழுஞ்சமயம்
இந்த உலகில் எங்கெங்கும் இலங்கி யமைக்கா அறிஞரெலாம்
சிந்தை தெளிக்கும் அறிகுறிகள் தெரியக் கண்டு புகழ்சமயம்
வந்த பிற்பன் மதங்களுக்கும் வழியே காட்டும் வான்சமயம்.

ஒருநாட் டினும்ஓர் மொழியினுமே உளவா காவாம் ஒப்பரிய
திருநாட் டும்சீர்த் தேவார திருவா சகமாம் திருமுறைகள்
பொருள்நாட்டும்பற்பொன் னூல்கள்புகலும்வனேப்பிறபலவும்
அருள்நாட்டும்தான்ஒன்றேபெற்றனைத்துநலஞ்சேர்அருஞ்சமயம்.

அற்பு தங்கள் அருட்செயல்கள் ஆரும் காணப் பலவியற்றிப்
பொற்பு மிகும்எம் பெருங்குரவர்புனித நால்வர்பெருமக்கள்
உற்று மிகஇஞ் ஞாலமெலாம் ஓங்கிப் பரவு கெனத்தங்கள்
நற்பண் பாம்பே ரிரக்கத்தால் நமக்கா வளர்த்த நறுஞ்சமயம்

இறையேஉயிரேஉலகென்றேஇலங்கும்மூன்றுபெரும்பொருளும்
முறையேஅளவைநெறிநின்று முன்னும்பின்னும் முரணுமே

நெறியேஆய்ந்து டைவிடையால்நிறுத்தும்மறுத்தும்மெய்ந்நிறீஇக்
குறையேஎவரும்உணர்வுடையார் கூறற்கில்லாப்பொதுச்சமயம்.

இல்லென் வழக்கர் முதலாகச் சிவாத்து விதிகள் ஈறாகச்
சொல்லும் வழக்கர்பற்பலரும்சொல்லாநிற்கும்எத்துணையோ
பல்லவழக்கும்கடந்துசென்றுபண்டைத் தமிழர் மறைமுடிவாம்
நல்ல வழக்கேதழீஇநின்று நலமே வளர்க்கும் எழிற்சமயம்.

ஒன்றாய் வேறாய் உடனாக உயிர்கள் தம்மோ டொருங்கியைந்து
நன்றே அருளால்அவற்றினுக்கு நயந்து கண்டும் காட்டியுமே
நின்றேஉதவும்இறைவனருள்நிலையை அத்துவிதப்பொருளால்
வென்றேஉணர்த்தும்மெய்கண்டான்விளங்கநிறுவும்மெய்ச்சமயம்.

சிற்பம் ஓவம் இசைகூத்துச் சிறப்பே மிக்க பிறகலைகள்
பொற்பத்தழைத்தேஆங்காங்கும்புதுமை புனிதம் அற்புதங்கள்
பற்ப லார்ந்துவிளங்கநின்றுபண்டைத்தமிழர் சீர்தெளிக்கும்
வெற்றித் தூணும் கோயில்பல மிகவும் உடைய விழுச்சமயம்

கருதிஉணர்ந்துகலைஞரெலாம்களித்துவியந்துமெய்ம்மறக்கும்
வரையும்வடிவிற்சிறந்துயர்ந்த மாட்சிமிகும், அம் பலவாணர்
அரிய சிறப்பின் அம்மையப்பர் ஆலின் நீழல் அமர்செல்வர்
முருகன்அழகுவடிவமெலாம்முன்னிஅமைத்த முதற்சமயம்.

எல்லாஉயிரும் விழைந்துநின்றே எய்த முயலும் இன்பதனை
நில்லா உலகில் எய்துதற்காம் நெறியே அறியார் மிகமயங்கிப்
பல்லாற் றானும் பலப்பலரும் பலவே குழற அன்பொன்றே
நல்லாறென்று கண்டுணர்ந்து நலக்கத் தெருட்டும் நற்சமயம்.

பிற்றைநாளிற்கவிந்துகொண்டபெரிதாம்குழப்பப்பேரிருளால்
பொற்றைஎனலாம்பலகுறைகள்பொதிந்துகொள்ள அவைதகர்த்துக்
கற்று வல்ல பேரறிஞர் கணிப்பில் புகழார் மறைமலைப்பேர்
உற்ற பெரும்பே ராசிரியர் உயிரின் வளர்த்த உயர்சமயம்

இன்றிந் நாட்டில்இத்துணைப்பல் இழிவும் தாழ்வும் சீர்கேடும்
நன்றிந் நாட்டு மக்களெலாம் நமதிச் சமய உண்மைகளை
ஒன்றும்சிறிதும்உணராமே உழலும் பயனாற் போந்தனவாம்
என்றேஎளியேன்எண்ணுகின்றேன்எனைப்பல்அறிஞர்கருத்துமிதே.

செய்தித் திரட்டு

11—4—52 திரிசிரபுரம் சைவ சித்தாந்த சபையில் காரைக்கால் அம்மையார் திருநாள் கொண்டாடப்பட்டது. திருச்சி T. S. சிவப்பிரகாசம் "புனிதவதியாரை"ப் பற்றியும் T. பெருமாள்பிள்ளை "அற்புதத் திருவந்தாதி"யைப் பற்றியும் பேசினார்கள்.

19—4—52 திருத்தருப்பூண்டி சிவாலயம் சித்திரைத் திருவிழா மே. திங்கள் 13-வரை நடைபெறும். சமயச் சொற்பொழிவுகள் நடைபெறும்.

20—4—52 திரிசிரபுரம் சைவ சித்தாந்த சபை அப்பர் சுவாமிகள் திருநாள். திரு. சம்பந்தசாமி பிள்ளையவர்கள் "வினையுலகை அஞ்சாத வீரம்" என்னும் பொருள் பற்றி பேசினார்கள்.

20—4—52 பழனியாண்டவர் கோயில் P. A. ராஜு செட்டியார். ஆண்டவருக்கு வைரக் கிரீடம் சாற்றுவித்துத் தங்க ரதத்தில் எழுந்தருளச் செய்தார்.

20—4—52 நேமத்தான்பட்டி திருநாவுக்கரசு வித்தியாசாலை 26-வது ஆண்டு விழா திரு. உத்தண்டராம பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பரிசுகள் வழங்கப்பெற்றன.

20—4—52 திருப்பூந்துருத்தி "அப்பர் நினைவு அன்னம் பாலிப்பு"த் தொடக்க விழா. காசி மடம் இளவரசு தலைமை. சிவக்கவிமணி முதலியோர் பேசினார்கள்.

21—4—52 பொள்ளாச்சி....பண்டார சந்நிதிகளுக்கு வரவேற்பு திருவஞ்சைக்களம் போகும் வழியில் ஸ்ரீ திருவாவடுதுறை, தருமபுரம் பண்டார சந்நிதிகளுக்கு, பொள்ளாச்சிப் பெருமக்கள் சார்பிலும் நகர ஆட்சி மன்றச்சார்பிலும் வரவேற்புகள் அளிக்கப்பட்டன.

12, 13, 14 மே 52. சென்னை ஆசிரியர் சங்கம், 42வது ஆண்டுவிழா கோவையில் மாநாடு நடைபெறும். கோவை மாவட்டத்தைப் பற்றிய வெளியீடு ஒன்று பிரசுரிக்கப்படும். சொற்பொழிவுகளும் தீர்மானங்களும் நடைபெறும்.

வேலூர், கஸ்பா வார வழிபாட்டுச் சங்கம் : ஷை கழக 8வது ஆண்டு விழா 13—4—52 ஞாயிறன்று உயர்திரு. D. T. தெய்வசிகாமணி முதலியார், B. A., L.T., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுபோது வித்துவான் - கோ. கதிர்வேல் முதலியார் அவர்களும், வித்துவான் - அ. கன்னைய செட்டியார் அவர்களும் " பக்தி " என்னும் பொருள் பற்றி விரிவுரை யாற்றினர்.

திருவள்ளுவர் செந்தமிழ்ச் சிவநெறிக் கழகம் சைதாப் பேட்டை. திருக்குறள் பொருட்பால் நிறைவு விழா : ஆசிரியர் திருவள்ளுவரகம் ப. இராமநாதம் பிள்ளை அவர்களால் நடத்தப்பட்டு வரும் குறள் வகுப்பில் 26—4—52 சனி யன்று பொருட்பால் நிறை வெய்தியமை முன்னிட்டு 27—4—52 ஞாயிறு மாலை 6 மணிக்குப் பாரிப்பாக்கம் கண் ணப்ப முதலியார் தலைமையில் பொருட்பால் பாராயணத் திற்குப் பின் ஆசிரியர் அவர்களை வணங்கி நன்றி கூறிச் சிறப்புச் செய்து வகுப்புக்கு முறையாக வந்த அடையார் திரு. கு. பார்த்தசாரதி, இ. மு. தனவேலு அவர்களைப் பாராட்டிப் பரிசளிக்கப்பட்டது. பின் 8 மணிக்குக் காமத் துப்பால் தொடங்கப்பெற்றுக் கூட்டம் இனிது கலைந்தது.

அரியலூர் மணிவாசக மன்றச் சார்பில் 29—3—52 மாலை 5 மணிக்கு, உயர்திரு. B. வேங்கடாசலம் பிள்ளை, B. A., B. L., M. L. A. அவர்கள் தலைமையில், தருமபுர ஆதீன சமயப் பிரசாரகர்கள் உயர்திரு. சோமசுந்தரத் தம்பிரான், சமரபுரி முதலியார், ச. முருகேச முதலியார் ஆகியவர்கள் " அப்பர் காட்டிய நெறி " என்பது பற்றிச் சொற்பொழிவாற்றினர். ஏராளமான மக்கள் வந்து கேட் டின்புற்றனர்.

விருதைச் சைவ சித்தாந்தக் கழகத்தின் ஆதரவில் 20—4—52 ஞாயிறு திருநாவுக்கரசு நாயனார் திருநாள் தருமை ஆதீனப் பிரசாரக் கூட்டத் தலைவர் மறைத்திரு. சோமசுந்தரத் தம்பிரான் அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. திரு. T. S. கந்தசாமி முதலியார், எம்.ஏ., புலவர்-அ. இராச கோட்டியப்பன், புலவர் - சேதுரகுநாதன், தூத்துக்குடி

சிவாமசீத்தாபாய் அம்மையார் முதலானோர் 'அப்பாடிகள்' குறித்து விரிவுரை நிகழ்த்தினர். செயலாளர் V. பொன்னம்பலம், எம். ஏ., நன்றி கூறினார்.

தூத்துக்குடிச் சைவ சித்தாந்த சபையின் 68-ஆம் ஆண்டு நிறைவு விழா வரும் வைகாசித் திங்கள் கக, கஉ (1952 மே 24, 25) ஆம் நாட்களில் நடைபெறும். குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனம் மறைத்திரு. தெய்வசிகாமணி அருணாசல தேசிக சுவாமிகள் தலைமை தாங்குவார்கள். தேவகோட்டைத் தமிழ்வள்ளல் திரு. சேவுமெய்யப்பச் செட்டியார் விழாப் போவையைத் தொடங்கிவைப்பார்கள். பல அறிஞர்கள் சொற்பொழிவாற்றுவார்கள். சபையைச் சார்ந்த பாகம்பிரியாள் மாதர் கழக 24ஆம் ஆண்டுவிழா, அண்ணாமலை நகர் திருமதி பு. ர. சா. இராசேசுவரி அம்மையார் அவர்கள் தலைமையில் 26-5-52 அன்று நடைபெறும். நிகழ்ச்சி நிரல்களை அமைச்சரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

பூவாளூர்ச் சைவசித்தாந்த சங்க 42ஆம் ஆண்டு நிறைவு விழா, 28, 29—3—52 வெள்ளி, சனிக்கிழமைகளில், சித்தாந்த சாபம் சிவத்திரு ஈசான சிவாச்சாரியார் அவர்கள் தலைமையில் சிறப்புற நிகழ்ந்தது. திருவாவடுதுறை ஆதீனப் புலவர் - த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளை, திருவையாறு S. T. சீனிவாசாச்சாரியர், பள்ளத்தூர் முத்துவேங்கடாசலம் ஐயர் 'ஞானசம்பந்தம்' ஆசிரியர் ச. தண்டபாணி தேசிகர் என்பவர்கள் முறையே "திருமந்திரம்", "சிவ அன்பு", "அன்பும் அருளும்", "சங்க காலத்துச் சைவ சித்தாந்தம்" என்னும் பொருள்கள் பற்றி அழகுறப் பேசினர். சித்தாந்தச் செந்நெறியின் தனிப்பெரும் சிறப்புக்களைத் தலைவர் இனிது விளக்கினர். பின்னர்ச் சென்னை அரசியலாரின் இந்து சமய நிலையங்களின் சீர்திருத்த மசோதாவில் இன்றியமையாத சில திருத்தங்களைச் செய்தல் வேண்டுமெனவும், கோயில்கள் மடங்கள் முதலிய அறநிலையங்களின் ஆட்சிப் பொறுப்பை அரசியலார் தாங்களே நேரடியாக எடுத்துக் கொண்டு விடாமல், சிறந்த

சமய அறிவும் ஒழுக்கமும் சீலமும் பண்பும் வாய்ந்தவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களைக் கொண்டு நடத்திவால் வேண்டுமெனவும், அங்ஙனம் செய்யாமையால் நேரும் இன்னல்கள் இன்னின்ன எனவும் விளக்கி இரண்டு தீர்மானங்களைத் திரு. நா. சு. மு. செல்வகணபதிச் செட்டியார், அ. நமச்சிவாயம் செட்டியார், இளங்காடு பழனி முருகைய நாட்டார் ஆகியவர்கள் முறையே நிறைவேற்றினர்.

சைதைத் திருவள்ளுவர் செந்தமிழ்ச் சிவநெறிக் கழகச் சார்பில், திருக்குறள் பொருட்பால் நிறைவுவிழாவை ஒட்டிச் சித்தாந்த பண்டிதர் திரு. ப. இராமநாதம் பிள்ளை அவர்களுக்குப் பொற்கிழி ஒன்று அளிக்கப்பெற்றது. விழாவிற்குச் சித்தாந்தப் பேராசிரியர்-பாரிப்பாக்கம் - கண்ணப்ப முதலியார் அவர்கள் தலைமை ஏற்றனர். காஞ்சிபுரம் பொன். குமாரசாமி அடிகள், ஆடலரசு முதலியவர்கள் பேசினர்.

உயர்திரு. சாத்தூர் - T. S. கந்தசாமி முதலியார், M. A., அவர்கள் அறுபதாவது ஆண்டு நிறைவு விழாச் சிறப்பு : 9—5—52 வெள்ளிக்கிழமை காலையில் நடைபெற்றது. அதனை ஒட்டி, நெல்லை முதலிய இடங்களில் பாராட்டுக் கூட்டங்கள் நடைபெறும். சைவ அன்பர்களும் தமிழ் அன்பர்களும் அவைகளில் கலந்துகொள்வார்கள். திரு. முதலியார் அவர்கள் சைவத்திற்கும், தமிழுக்கும் அளவற்ற சேவை செய்திருக்கின்றார்கள். திருக்குறளுக்கும், சிவஞானபோதத்திற்கும் நுண்ணிய உயர்ந்த உரை காண்பதில் அவர்களைப்போல் வேறொருவர் இலர் என்பது மிகையன்று. காசிப் பல்கலைக் கழகத்தில் சித்தாந்தத்தை நிறுவிப் பெரும்புகழ் பெற்றிருக்கின்றார்கள். நமது சமாஜத்திற்குத் தொடக்கத்திலிருந்தே தொடர்பு கொண்டவர்கள். சமாஜக் கூட்டங்களில் கணக்கற்ற பேச்சுக்களை நிகழ்த்தியதன்றிக் கோவையில் நடந்த சைவ மாநாட்டில் தலைமை வகித்தும், குன்னூரில் நடந்த கோடை வகுப்பில் முதலாசிரியராக இருந்தும் அரிய தொண்டுகளைப் புரிந்திருக்கிறார்கள். அப்பெரியாரின் 60ம் ஆண்டு நிறைவிழாச் சிறப்பு இனிது நடைபெறுவதாகுக! அப்பெரியார் பல்லாண்டு வாழ்ந்து உறுதியான உடல்நலம் பெற்றுத் தமிழுக்கும் சைவத்திற்கும் பன்மடங்கு திருத்தொண்டு செய்து நீடூழி வாழுமாறு இறைவன் அருள் புரிவானாக!

Regd. M. 2330 "SIDDHANTHAM" Vol. 25 No. 5

சமாஜ வெளியீடுகள்

		ரூ.	அ.
பெரியபுராணம்—அகராதியுடன்	...	3	0
நாலாயிரதிவ்ய பிரபந்தம்	...	3	0
சுந்தரர் தேவாரம்—குறிப்புரையுடன்	...	1	0
திருவாசகம் மூலம்	...	0	4
திருப்போரூர்ச் சந்நிதிமுறை	....	0	12
திருவாசகம்-திருச்சதகம் (பண்டிதமணி மு. கதிரேசஞ் செட்டியார் பேருரை ரூ. 8. அங்கத்தினருக்கு		7	0
சித்தாந்த அஷ்டகம் (உரையுடன்) [சிவப்பிரகாசம் (பிற்பகுதி), திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது,] உண்மைநெறி விளக்கம், சங்கற்பநிராகரணம் துகளறுபோதம் (மூலம்)	...	0	8
சிவஞானபோதம் தமிழ் முதல் நூலே மொழி பெயர்ப்பல்ல.	...	0	2

தபாற்கூலியுள்பட முன்பணம் அனுப்புக. நூல்கள் வி. பி.-யில் அனுப்பப்படமாட்டா.

குறைந்த விலைக்கு விற்பனை

அடியிற் குறித்த ஆண்டுகளின் 'சித்தாந்த' மலர் (12 இதழ்கள்)ஒன்று ஒரு ரூபா வீதமும், முழுமலரல்லா தனி இதழ் ஓர் அணு வீதமும் விற்கப்படும். வேண்டியவர் தபாற் செலவுடன் முன்பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

[மலர் 3 (1930), 4 (1931), 14 (1941), 22 (1949)]

Printed at the Sadhu Press, 15, Ganapathi Mudali Street, Royapettah by V. Rajammal, (P I. Card No. M. S. 115) Edited and Published by C. M. Ramachandran Chettiar, B.A., B.L., for the Saiva Siddhanta Maha Samajam, at 53, Thiruvalluvar Street, Saidapet, Madras-15, P.I.Card No. M. S. 81.